செந்தமிழ்

தொகுதி 82 செப்டம்பர் 88 பகுதி 3

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

—உள்ளே—

தமிழ் நாவல்களில் விடுதலைப் போரின் தாக்கம்
கடல் கடந்த கண்ணன்
இரட்டைக் காப்பியங்களின் பெண்களின் மதிப்பு
மலேசிய மேடை நாடகங்கள்

5018

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

ஆசிரியர் என் எஸ். முத்துமலைச்சாமி, பி.ஏ பி.எல்.,

செந்தமிழ்

தொகுதி 82— செப்டம்பர் 88 —பகுதி 3

பொருளடக்கம் பக்கம்

1. தமிழ் நாவல்களில் விடுதலைப் போரின் தாக்கம் 1
— டாக்டர். தா. வே வீராசாமி.

2. கடல் கடந்த கண்ணன்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி) 16
பழநி. அரங்கசாமி

3. இரட்டை காப்பியங்களின் பெண்களின் மதிப்பு 21
— பேராசிரியர். வ. இந்திரா பவாநி

4. நூல் மதிப்புரை 28

5. மலேசிய மேடை நாடகங்கள் 31
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
—அ. மணிசேகரன், கோலாலம்பூர்.

பொறுப்பாசிரியர் — டாக்டர். பழநி. அரங்கசாமி

தமிழ் நாவல்களில் விடுதலைப் போரின் தாக்கம்

டாக்டர். தா. வே. வீராசாமி
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

இந்தியா வெள்ளையர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த-போது விடுதலை வேட்கையுற்றுப் பொங்கி எழத் துடித்தது. இமயம் முதல் குமரி வரை வாழும் இந்திய மக்கள் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' எனப் புரட்சிக் குரல் எழுப்பினர் நம் நாட்டின் நாகரிகம், பண்பாடு, மொழி, மக்கள் உரிமை ஆகியவை எல்லாம் மாற்றானின் காலடியில் கசங்கிய மலர்களாயின ஆயினும் நசுக்கப்பட்ட மக்கள் நாளும் சுதந்திர ஒளியைக் காணத் துடித்தனர் காலில் பூட்டிய விலங்கை உடைத்தெறிந்து விடுதலை பெற்ற மண் மீது வீர நடையிட முனைந்தனர். புதைந்து கிடக்கும் இந்தியப் பொன்னையும் மணியையும் கட்டி வந்து கொட்டி வைக்கக் குரல் எழுப்பினர். அடிமைச் சகதியிலிருந்து வெளியேறி உரிமை நறுமணத்தில் உலாவப் புறப்பட்டனர். இத்தகைய புதுவாழ்வு வாழ விரும்பிய உள்ளத் துடிப்பின் ஒலியை இந்திய மொழியிலுள்ள இலக்கியங்கள் காட்டத் தவறவில்லை. குறிப்பாகத் தமிழில் எழுந்த கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் தத்தம் பங்கைச் சுதந்தர தேவிக்குரிய காணிக்கையாகச் செலுத்தியுள்ளன அந்தப் புனிதப் போராட்டத்தில் தமிழ் இலக்கியமும், குறிப்பாகத் தமிழ் நாவல்களும் பங்கு கொண்டன. சுதந்திரப் போராட்டத்தின் கதிர்வீச்சுக்களைத் தாங்கிய வண்ணம் தமிழ் இலக்கிய மலர்கள் மணம் வீசின. அத்தகைய மணத்தைத் தமிழின தொடக்க கால நாவல்களில் குறிப்பாக வெளிப்படுவதைக் காண்கின்றோம்.

மாயூரம் வேதநாயகரின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' தமிழில் எழுந்த முதல் நாவல். இந்த நாடு முன்னேற வேண்டுமானால் பெண்கள் கல்வி பெற வேண்டும் சமூகத்தில் உரிமை பெற்று உயர வேண்டும் என்ற புதுமைக் குரலின் எதிரொலியாக அது வெளி வந்தது. அதுமட்டுமன்று; ஆங்கில ஆட்சியில் ஆங்கில மொழியே எல்லா நிலையிலும் பீடு நடைபோட்டதுடன் தமிழ் போன்ற இந்திய

மொழிகளின் வளர்ச்சியை ஓரளவு சிதைத்தது அவற்றின் அழிவிலே இந்திய உரிமை அழிவதைக் கண்ட விடுதலை விருப்பிகள் தாயக விடுதலையில் தாய்மொழி விடுதலையும் இணைந்திருப்பதைக் கண்டனர். விடுதலைப் போரில் தாய்மொழி ஆக்கத்திற்கு வேண்டுவன செய்ய வேண்டுமென்று துடித்தனர்.

'பிரதாப முதலியார் சரித்திர' நாவல் தன் கதைத் தலைவி ஞானாம்பாள் வாயிலாகச் சொந்தமொழி வளர வேண்டும் என்ற உணர்வு முளைத்துத் தமிழின் அருமையை நாட்டுமக்கள் உணர வழிகாட்டுகிறது தமிழ் மக்களில் ஒரு சிலர் தமிழைப் புறக்கணிப்பதால் தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் புலியைப் பார்த்து நரி சூடிட்டுக் கொண்டது போல ஆங்கிலத்தில் வாதித்துக் குருடன் கூத்து பார்த்தது போன்ற நிலை உருவாக்கியதை வெட்ட வெளிச்சமாக்குகிறது மேலும் ஆங்கிலம், பிரஞ்சு முதலிய அன்னிய மொழிகள் மேலிட்டு இந்திய நாட்டு மொழிகளின் சீரைக் குலைத்ததை ஒளிவு மறைவின்றி உணர்த்தியது. திருவள்ளுவர், கப்பர், ஔவையார், அதிவீரராமபாண்டியர் போன்ற அரும்பெரும் புலவர்கள் இயற்றிய நூல்களைப் பயில வேண்டும் மேனாட்டு மொழிகளில் உள்ளது போன்ற நல்ல இலக்கியத்தைத் தமிழில் வளர்க்க வேண்டும் என மொழி விடுதலைக்குரிய ஆக்கக் கருத்துக்கள் அதனுள் வெளிப்பட்டுள்ளன இவ்வாறு தாயகத்தில் தாய்மொழிக்குரிய விடுதலைக்கு ஒரு முதலிடத்தைத் தமிழில் 1879 - இல் தோன்றிய இம் முதல் நாவல் நல்கியுள்ளது.

தமிழ் நாவல் தாய்மொழியின் விடுதலையை உணர்த்தியது போலவே தாய்நாட்டின் விடுதலை உணர்வையும் உணராமல் இல்லை 1893 - இல் திருச்சியிலிருந்து சு. வை. குருசாமி சர்மா என்பவரின் 'பிரேம கலாவத்யம்' என்ற நாவல் வெளிவந்தது. நாவலின் தலைவன் பிரேமன் நாட்டு விடுதலைக்குரிய கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுகிறான். நம்நாட்டினர் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதை முதலில் வற்புறுத்துகிறான்.

நாட்டுமொழி தான், நம் முன்னோர் பெருமையை நாமறியவும் நம் செயல்களை நமக்குப்பின் வருவோர் அறியவும், நம்மிடம் ஒற்றுமையை உண்டாக்கவும் வல்லது. நாடு வளர்ச்சி அடைவதும் நாகரிகத்தில் பெருகுவதும் அந்தந்த நாட்டின்மொழிப் பெருக்கத்துடன்

இயைந்தே இருக்கும். ஞானிகளுக்கு ஆன்மாவும் கடவுளும் எப்படியோ அப்படியே ஒரு மொழியும் அது வழங்கும் நாடும் அத்வைதப்பட்டவைகள் என்று பிரேமன் கூறும் போது மொழி உரிமையும் நாட்டுரிமையும் ஒன்றோடு ஒன்றாகி உள்ளதை இந்த நாவல் உணர்த்தும். இந்த நாவலின் இறுதியில் நாட்டை ஒரு ஆண் மகனாகவும், அன்னியர் படையெடுப்பை இளைய தாயின் கொடுமையாகவும், உருவகம் செய்திருப்பதை வெளிப்படுத்தும்போது நாட்டு விடுதலைக்குரிய போராட்டவுணர்வும் அதனைப் பெற உணர்ச்சியும் கல்வியும் தேவை என்பதைப் 'பிரேமகலாவத்யம்' என்ற நாவல் உணர்த்துகிறது. இவ்வாறு தொடக்கத்தில் தோன்றிய தமிழ் நாவல்கள் இந்திய விடுதலைப் போரின் அடிப்படையை மொழி வாயிலாகவும் நாட்டுரிமை வாயிலாகவும் வெளிப்படுத்தியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய நாட்டின் பொருளாதார நிலையும், அரசியல் வளர்ச்சிகளும் ஆங்கில ஆட்சிக்கு எதிராக உருவெடுத்தன. பல்வேறு வகைப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு அன்னிய ஆட்சியை நீக்கப்பாடுபட்டனர். அரசியல் அடிப்படையில் லோகமான்ய திலகர், மகாத்மா காந்தி போன்ற தலைவர்கள் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்றனர். அவர்களுடைய சொல்லும் செயலும் மக்களுக்கு வழிகாட்டத் தொடங்கின. அவர்கள் உருவாக்கிய திட்டங்கள் தங்களை விடுதலைக்குக் கொண்டு செல்லும் எனப் பொதுமக்கள் நம்பினர். அத்தலைவர்கள் பேசிய பேச்சிலிருந்து புதிய எழுச்சியைப் பெற்றனர். இவ்வாறு பொதுமக்கள் உணர்வு பெற்றது போலவே எழுத்தாளர்களும் சமுதாய அரசியல் வாழ்வில் புலப்பட்ட கதிரவனின் வெளிச்சத்தில் மூழ்கினர். அதன் விளைவைத் தமிழ் நாவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

விடுதலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாடல்கள் தேசீய முழக்கமாக வெளிவந்தன. அது மட்டுமா? அவர் எழுதிய மூன்று 'கதை நாவல்'களில் தேசிய எழுச்சிப் போராட்டத்தின் தாக்கத்தை நன்கு உணர்கிறோம். இந்திய விடுதலைப் போராட்டத்தில் 'வந்தே மாதரம்' என்ற தாரக மந்திரம் நாடெங்கும் பரவியிருந்தது. அதனைப் பாரதியின் ஞானரதமும் வெளிப்படுத்துகிறது. கந்தர்வ கன்னியின் தம்பிக்குச் சித்தரஞ்சனன் என்று பெயர் சூட்டும் போதே வங்க நாட்டுத் தேசியத் தலைவரின் பெயர் நினைவுக்கு வராமலிராது. அத்துடன் நின்றுவிடவில்லை. கந்தர்வலோகத்தில் அவன் தன்னை நோக்கி 'வந்தே' என வணங்கியதையும் எழுதியுள்ளார். இந்திய

விடுதலைக்கு வங்கம் தந்த வந்தேமாதர மந்திரத்தின் மறுபதிப்பாக இச்செய்தியைக் காட்டுவது விடுதலைப் போரின் தாக்கம் ஆகும் மேலும் ஞானரதம் தர்மலோகத்திற்குச் சென்றபோது கவிஞர் அங்குள்ள தர்மராஜாவின் முகத்தைக் காண்கிறார். கவிஞர்க்குத் தர்மராஜாவின் முகத்தில் பாலகங்காதரதிலகரின் சாயல் தென்பட்டதாகக் கூறுகிறார். இது தர்மத்தையும் இந்திய விடுதலைப் போரையும் இணைக்கும் மனப்பாங்கின் விளைவு எனலாம் விடுதலைப் போராட்டத் தலைவர்களைத் தர்மத்தின் தலைவர்களாக இந்திய மக்கள் நம்பிய நம்பிக்கையின் வெளிப்பாடாக இப்பகுதி புலப்படுகிறது.

வரலாற்றை வரன்முறையாகப் பார்க்கும்போது அன்றைய ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியநிலப்பிரபுக்களின் நிலவுடைமைகளை வலுப்படுத்தியதோடு நிற்காமல் 1869-ஆம் ஆண்டு முதல் ஜமீன்தார்கள் போன்ற பழைய நிலப்பிரபுக்கள் உடைமையாளர் என்ற உரிமையைப் பெற்றனர் இதனால் இந்திய உழவர்களின் துன்பம் பலமடங்கு பெருகியது

அரைகுறையாக முடியாமல் நிற்கும் 'சின்னசங்கரன் கதை' பழங்காலப் பெருந்தனக்காரச் சமுதாயம் பற்றிய எள்ளல் இலக்கியம் ஆகும். இந்த நாட்டைக் கொள்ளையடித்து வந்த வெள்ளையாட்சியோடு கைகுலுக்கிய ஜமீன்தார் பரம்பரையின் கோலாகல வாழ்வை எள்ளற் சுவையில் காட்டுவார் பாரதியார். நிலவுடைமையின் கொடுமைக்கு எதிராக இந்திய விடுதலைப்போரில் காந்தியடிகள் நடத்திய சம்பரான் இயக்கத்தை இந்திய நாடு நன்கு அறியும். அத்தகைய எழுச்சி போலப் பல எழுச்சிகள் இந்திய நாடெங்கும் எழுந்ததை வரலாறு கூறும் அச்செய்திகளின் உண்மை உருவத்தின் முன்னோட்டமாகச் 'சின்ன சங்கரன் கதை' யில் உலாவரும் இராமசாமிக் கவுண்டரைப்பாரதி படைத்துள்ளார்

விடுதலை இயக்கத்துடன் சீர்திருத்த இயக்கமும் ஒன்றாகப் பிணைந்து வளர்ந்ததை இந்திய வரலாறு எடுத்துரைக்கும். அத்தகைய சீர்திருத்தங்களில் ஒன்று 'விதவைகளின் மறுமணம்' ஆகும். வேளாங்குடி என்ற சிற்றூரில் தோன்றிய பூகம்பம் போல் மறுமணக் கருத்தைப் பாரதியின் சந்திரிகையின் கதை' கூறும். கதையிலே சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், ஆந்திர நாட்டுச் சீர்திருத்தத் தலைவர் வீரேசலிங்கம் பந்துலு ஆகிய மக்களையும் கதை மாந்தர்களாகப் பாரதி காட்டுகிறார். இதனால்

பொதுமக்கள் பார்வையில் இத்தகைய பெருமக்களின் பெருமை எவ்வாறு உணர்த்திருந்தது எனக் காணமுடிகிறது. இக்கதை நாவல் வாயிலாக மறுமணம், கலப்புமணம் என்பவற்றைக் காட்டுவதுடன் அவற்றின் அடிப்படையில் அன்பு அமைந்திருக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துவார் கவிஞர். அரசியல் போராட்டமும் சீர்திருத்த இயக்கமும் அதன் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லிச் செல்கிறது பாரதி எழுதிய 'சந்திரி-கையின் கதை'.

பாரதியின் மூன்று 'கதை நாவல்'களும் தேசியப் போராட்-டத்தின் பல்வேறு வளர்ச்சிநிலைகளை ஆங்காங்குக் காட்டிச் செல்-வதை அறிகிறோம் எனினும் இவை யாவும் விடுதலைப் போராட்-டத்தின் மேலோட்டமான தாக்கம் எனவே கொள்ளலாம். எனினும் இக்குறிப்புகள் இந்திய சமுதாயம் அரசியல் உரிமை கோரிப்போராடி வந்ததின் விளைவுகள் என்பதை யாரும் ஒப்புக்கொள்வர்

1922ஆம் ஆண்டு வி என். அரங்கசாமி அய்யங்கார் எழுதிய 'சபேசன் அல்லது சுதந்தர ரட்சகன்' என்ற நாவலே நாட்டு விடுதலைப் போராட்டத்தினை வெளிப்படுத்தும் முதல் நாவல் என்பர். நாவலின் தலைவனாம் சபேசன் காந்தி அடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை செல்லும் நிகழ்ச்சி அறநெறியில் போராடும் உள்ளத்தைக் காட்டும். சபர்மதி ஆச்சிரமத்தில் வாழ்ந்த தேசீயப் போராட்ட வீரரிடையே தோன்றிய காதலின் மலர்ச்சி திருமணமாகக் கனிகிறது. மேலும் நாட்டு விடுதலைக்கெனப் பத்திரிகை தொடங்கி மக்களிடையே போராட்ட உணர்வைப் பரப்புவதாக இந்-நாவல் கூறும் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் லோகமான்ய திலகர், அரவிந்த கோஷ், காந்தியண்ணல் ஆகியோர் பல்வேறு பத்திரிக்கைகள் தொடங்கிப் படித்த மக்களிடையே நாட்டுப்பற்றைப் பரப்பிய தாக்கம் இந்த நாவலிலும் வெளிப்படுவதைக் காணலாம்.

இயற்கை அழகை மனம் மகிழும் வண்ணம் படைத்ததுடன் தமிழ் இலக்கியங்களிலிருந்து ஏராளமான மேற்கோள்களைப் பயன் படுத்தி மேலைச் சிவபுரி பனையப்பசெட்டியார் 1926-ஆம் ஆண்டு 'காந்திமதி' என்ற நாவலைப் படைத்தார். துப்பறியும் செயல்கள் இந்த நாவலில் இடம் பெற்றிருந்தாலும் இது மற்ற நாவல்களி-லிருந்து வேறுபட்டுள்ளது. அதற்குக் காரணம் தமிழகத்தில் எழுந்த

விடுதலை இயக்கம் தான். சீதா பிராட்டி போன்ற கற்புள்ள மகளிர் எவ்வளவு துன்பப்பட்டாலும் முடிவில் மேன்மையுறுவர் என்ற உண்மையை உறுதிப்படுத்தும் போது நம்நாட்டின் நிலையையும் இந்நாவல் எண்ணிப் பார்க்கிறது. நம்நாடு முன்னேறத் தேசபக்தி இன்றியமையாதது என்பதை அறிவுறுத்தும் வகையில் இந்நாவலின் சில பகுதிகள் உருப்பெற்றுள்ளன.

இந்த நாவலின் பதினாறாம் அத்தியாயத்தில் மகாத்மா காந்தியின் பிறந்த நாள் கொண்டாட்டம் விவரிக்கப் பெறுகிறது. இப்பகுதி காந்தி அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விரித்துக் கூறாமல் இந்தியப் பண்பாட்டை விளக்கிய வகையில் காந்தி இயக்கம் என்ற போராட்டவுணர்வு நம் நாட்டில் எப்படிக் காலூன்றி நின்றது என்பதைக் காட்டும் இதனால் தேசியப் போராட்டத்தில் பண்பாட்டு வளர்ச்சிக்குரிய சிறப்பிடம் புலனாகிறது அத்துடன் விடுதலைப் போரில் இந்தியப் பண்பாட்டின் மறுமலர்ச்சி பெற்ற முதலிடம் பற்றி நன்கு விளக்கம் பெற முடிகிறது

தொடக்க காலத் தமிழ் நாவல்கள் தேசிய வளர்ச்சிக்குத்-தாய்மொழியாம் தமிழ் பெறும் இடத்தை வலியுறுத்தியது போலக் 'காந்திமதி' என்ற இந்நாவல் தனக்குரிய பங்கைச் செலுத்தியுள்ளது. இந்திய மண்ணை வெள்ளையர் கைப்பற்றிச் சுரண்டியதால் நாடெங்கும் வறுமை தாண்டவமாடியது. இந்திய மக்களின் வறுமைக்குக் காரணம் வெள்ளையர் அரசே என்பதை எடுத்துக் கூறி அவ்வரசினை நீக்குவதே அடிப்படை நோக்கம் என்பதை எடுத்துரைக்கிறது. தேசியப்போராட்ட நிலையில் சட்டசபை நுழைவும் கதரியக்கம் என்ற நிர்மாணத் திட்டமும் ஒன்றுடன் ஒன்று மாறுபடும் போது சட்டசபை மோகம் பெருகியதை இந்த நாவல் வருத்தத்துடன் வெளிப்படுத்தும். ஆயினும் உண்மையில் விடுதலை இயக்கம் வலுப்பெற வேண்டுமானால் இந்திய மக்களிடையே சிறப்பாகத் தேச பக்தர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும். காந்திய நிர்மாணத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணங்களுக்கு உரமூட்டுகிறது. விடுதலைப் போராட்டத்தில் காந்தி இயக்கம் பண்பாட்டு மறுமலர்ச்சி போன்றவற்றை உணர்ந்து அவற்றை எடுத்துரைக்கும் விடிவெள்ளியாகப் பனையப்ப செட்டியாரின் நாவல் படைப்பு உள்ளது. இத்தகைய நாவல் முயற்சிகளே அக்காலச் சுதந்தரப் போராட்டங்களின் எழுச்சியையும் ஏற்றத்தையும் எல்லோரும் உணரும் வகையில் உதவியுள்ளன.

வெளிநாட்டவர் ஆட்சி மறைந்தபின் உள்நாட்டு நிலை எப்படியிருக்க வேண்டும் என்று தேசியப் போராட்ட காலத்திலேயே சிந்திக்கத் தொடங்கினர் அரசியல் விடுதலை மட்டும் ஒரு நாட்டை உயர்த்தாது பொருளாதார விடுதலையும் பெற்றால் தான் நாடு வளம் பெறும் என்ற சிந்தனை வளரத் தொடங்கியது முதல் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பியாவில் சோவியத் ருஷ்யா மலர்ந்ததால் சோசலிசக் கொள்கை பரவியது. நம்நாட்டுப் பின்னணி-யில் காந்தி இயக்கம் தேசியப் போராட்டத்திற்குப் புதிய ஒளி ஊட்டியது. உலக வரலாற்றுப் பார்வையிலும் இந்திய விடுதலை இயக்கப் போக்கிலும் சோசலிசம், காந்தியம் என்னும் கொள்கை-களும் இந்திய மண்ணில் பரவ இடம் ஏற்பட்டது. இந்த எண்ணத்தை வெளிப்படுத்த கா. சி வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்' (1928) என்ற நாவல் வெளி வந்தது. முந்நூறு குடும்பங்கள் கூடி வாழும் மீனாட்சிபுரத்தைப் புதியதோர் சோசலிசப் பூங்காவாக வேங்கடரமணி காட்டுகிறார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று ஏக்கர் நிலமும், தோட்டம் சூழ்ந்த வீடும் என்ற அமைப்பு உருவாகிறது எல்லோரும் சேர்ந்து எல்லோர்க்காக உழைக்கும் பொது உழைப்பு, தன் வீட்டிற்காக உழைக்கும் தனி உழைப்பு என்னும் இருவகை உழைப்பும் கலந்த புதுச்சமூகம் எழுவதை 'முருகன் ஓர் உழவன்' காட்டும்.

கா. சி வேங்கடரமணியின் மற்றொரு ஒப்பற்ற படைப்பு 'தேசபக்தன் கந்தன்' என்ற நாவலாகும். விடுதலைப் போராட்டத் தாக்கம் என்பது இந்த நாவலில் அகநிலை மோதலாகப் பெரிதும் வெளிப்படுகிறது. ஒழுக்கக் கோட்பாடுகள், பொருளற்ற கட்டுப்பாடு-களைத் தகர்த்தெறியும் ஆவேச உணர்வுகள் ஆகியவை கரைபுரண்-டோடக் காண்கிறோம். அக்கோட்பாடுகளையும் உணர்வுகளையும் கொண்டு விடுதலை பற்றி மனத்தளவில் உணரும் வாய்ப்பை இந்-நாவல் நல்குகிறது. இதில் காதல் உணர்வு பலநிலைகளில் பல்வேறு கட்டங்களில் தூய உணர்வின் உச்ச நிலையை எட்டிப் பிடித்தபின் பேரின்ப நிலையான தேசத்தொண்டு ஒளிப் பிழம்பாக உருவெடுக்-கிறது. பல இடங்களில் உணர்வலைகளை அடிப்படுத்தித் தேசத்-தொண்டே வெல்கிறது. நாவலின் பல்வேறு பகுதிகள் தேசிய இயக்-கத்தின் நோக்கங்களை உணருமாறு செய்து பற்பல உருவங்களைப் படைத்துத் தேசிய உணர்விற்குப் புதுவடிவம் கொடுத்துள்ளார் கா. சி. வேங்கடரமணி.

தமிழ் நாட்டில் தேசிய உணர்வு தோன்ற அன்னியர் ஆட்சியை அடியோடு பிடுங்கி எறிய வேண்டும் என்ற உண்மையான ஆர்வத்தில் உதித்த நன்முயற்சிகளையெல்லாம் 'தேசபக்தன் கந்த'னின் கதைப் பின்னலின் அகத்தே பொலிவு பெறுமாறு படைத்துள்ளார் ஆசிரியர். படித்த நடுத்தர மக்கள் ஐ ஏ எஸ். என்ற மாயையில் சிக்கிக் காலம் காலமாகப் பரங்கியர் ஆட்சிக்குக் கைக் கட்டி வாய் பொத்திச் சேவை செய்யும் ஆட்டு மந்தையாக இருந்தனர். அம்மந்தையின் இடையே சிக்கிய சிங்கக் குட்டிபோல் கந்தன் அதை விட்டு வெளியேறுகிறான். தான் தப்பியதுடன் அன்றித் தன்னைச் சேர்ந்தவர்களின் மனத்திலும் ஐ ஏ. எஸ். பற்றிப் படிந்திருந்த மாயையை நீக்கினான். அத்தகைய நெறியில் படித்த மக்களும் நாட்டு விடுதலை இயக்கத்தில் கலந்து கொள்ளும் புதுமுயற்சியாகத் 'தேசபக்தன் கந்தன்' நாவல் மலர்ந்துள்ளது.

ஆக்கூரில் அமையும் புதிய இருப்புப் பாதை அந்தச் சிற்றூரின் போக்கையே பல வழிகளில் மாற்றுகிறது. அவ்வூரில் முளைத்த கள்ளுக்கடை புதிய நோயின் அறிகுறியாக அமைகிறது. மக்களின் வறுமை நிலையைப் போக்க விடுதலைக்காக உழைக்கும் கந்தனின் படைப்பு, பழமை புதுமை என்ற இருபெரும் துருவங்களை நன்கு புலப்படுத்துகிறது.

ஆக்கூரிலிருந்த கதை, சென்னையின் அழகிய பகுதியான அடையாற்றுக்குச் செல்கிறது. அங்கு ஐ ஏ. எஸ். பின்னணியில் வளர்கிற ராஜேஸ்வரி, ரங்கன் காதல் புதுநெறியில் புகுகிறது. பெரிய அரசாங்கப் பணியிலமர்ந்தபின் இந்த நாட்டுமக்களுக்கு எப்படி உதவிசெய்ய முடியும் என்ற நல்லெண்ணம் உருவாவதை இந்த நாவல் எடுத்துரைக்கிறது. காதலுணர்வுக்கு மாறாக அரசியல் உணர்வை உருவாக்கிக் காட்டும் இப்போக்கு அக்கால விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் என்பதை நன்குணரலாம்.

அடையாற்றில் மிதக்கும் படகுகள் பற்றி நாவலாசிரியர் கூறும்போது 'கரடுமுரடான கற்கள் நிறைந்த பாதையின் கஷ்டமறியாத வெள்ளையரின் சுகவேட்டைச் சிறு படகுகள் கம்பீரமாய் அப்பழுக்கின்றிப் பால்போல் வெள்ளிய சிறு பாயை விரித்துக் கொண்டு வேனிற்கால வானத்தில் சஞ்சரிக்கும் வெண்மேகம் போல் அடையாற்று நீரில் அசைந்து போய்க் கொண்டிருக்கும் அந்தப் படகு மரக்கட்டையே ஆனாலும் வெள்ளையரின் இந்நாட்டுப் பரிபாலன

வெளித் தோற்றம் போலக் கம்பீரத்துடன் சிறிதும் அழிவுப்பயமின்றித் தைரியமாய் நீரில் மிதந்து அசைந்து ஓடிக் கொண்டிருக்கும் எனக் காட்டுகிறார் இக்காட்சியிலே வெள்ளையர் ஆட்சி வளரும் தன்மையை இழந்த உயிரற்ற கட்டை எனவும் அது வெளித் தோற்றத்தில் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது எனவும் கூறும் போதே அன்னிய-ராட்சி விரைவில் மறையும் என்ற நம்பிக்கையும் ஊட்டிவிடுகிறார்.

இந்நாவலின் சிறந்த பெண்ணாக விளங்கும் ராஜேஸ்வரி தன் மீது காதல் கொண்ட ரங்கன் ஐ. சி. எஸ். என்ற அரசுப் பணியாள-ரின் மனத்தில் தைக்கும்படி பேசுகிறாள். அப்பால் பேசும் போது 'சர்க்காரிடத்தில் இப்பொழுது ஜனங்களின் குடுமிதான் அகப்பட்டிருக்-கிறது. உடலும் உயிரும் அங்கில்லை அவை சுதந்தரக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றன நீயும் உன் உத்திபோகத்தை விட்டுக் காங்கிர-ஸில் சேர்ந்து என்னுடன் ஒத்துழையாமையில் ஈடுபட்டுத் தேசத் தொண்டு செய்' எனக் கூறுகிறாள்.

இம்மொழிகளைக்காணும் போதும் இந்திய விடுதலைப் போரில் காந்தி அடிகள் வழிநடத்திச் சென்ற ஒத்துழையாமை இயக்கம், படித்த இளைஞர்களிடம் பெற்ற எல்லையற்ற செல்வாக்குப் பற்றி அறியலாம். தாய்நாட்டுக்குழைக்க வேண்டும் என்ற உணர்வு ஸ்டே-சன் மாஸ்டர் சுந்தரத்தின் மனைவி சரஸ்வதிக்கும் உண்டானதை இந்நாவல் குறிப்பிடும். தேசத்தொண்டில் ஈடுபடப் பண்ணைமைனராம் முதலியாரையும் அவள் வேண்டிக் கொள்கிறாள். அவள் பார்வை என்ற தரிசன வேதியில் இரும்பு பொன்னாவது போலப் பண்ணை-யாரும் மனம்மாறி நாட்டுத் தொண்டில் ஈடுபடுகிறார் கலெக்டர் பதவி ஏற்க வந்த ரங்கனும் நாட்டு இயக்கத்தில் சேர்கிறான். இவ்வாறு பல்வேறு குறிக்கோள்களுடன் பல்வகை வாழ்க்கை வாழ்ந்த-வர்களை எல்லாம் தேச விடுதலை இயக்கம் ஒன்றாக ஈர்க்கும் வகையில் புதிய மாற்றம் உண்டாகிறது

கேட்பாரற்றுச் சங்க முகத்தில் கிடந்த பெரிய கட்டையைக் கடல்நீரில் கொஞ்சம் கொஞ்சமாக அசைத்துப் பார்த்ததுப் பின் அதனைக் கந்தன் நீரோட்டத்தை அனுசரித்துத் தள்ளியவுடன் கட்டை ஆற்று நீரில் மிதந்து சென்றது. அதைப்பார்த்த கந்தனின் எண்ணம் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கியது.

இக்கட்டையின் நிகழ்ச்சி அடிமைப்பட்ட ஒருநாட்டின் விடுதலையை நமக்குக் குறிப்பிடுகிறது. 'சுதந்திரக் கிளர்ச்சி என்றும்

ஒரு பெரு வெள்ளம் வருமுன் அடிமைப்பட்ட நாட்டிலுள்ள ஜனங்கள் கரையில் கிடந்த இக்கட்டை போன்றவர்களே ! அவ்வெள்ளம் வந்ததும் இக்கட்டை அடைந்த சிறப்பை அவர்களும் அடைவார்கள் அல்லவா ' தேசபக்தன் கந்தனின் இந்த எண்ணம் தேசிய இயக்கத்தின் போராட்டவுணர்வுகளின் வெளிப்பாடு ஆகும்

இந்நாடு சுதந்திரம் பெற்றால் எப்படி இருக்கவேண்டும் என்று நாவலாசிரியர் கண்ட எதிர்காலக் கனவையும் காட்ட மறக்கவில்லை உண்மையான குடியரசின் தன்மை அவரவர் உழைப்பின் பலனை அவரவர் அனுபவிக்கச் செய்வதே என்று விடுதலைப் போரின் முடிவையும் காட்டும் முயற்சியாகத் 'தேசபக்தன் கந்தன்' என்ற நாவல் விளங்குகிறது

தேசீயப்போராட்டத்தின் விளைவாகப் பண்ணையாட்கள் பண்ணை முதலாளிகளுக்கு அடங்கி நடுங்கிய காலம்மாறி அவர்களுடைய மேலாண்மையை மறுத்துப் பொங்கி எழுந்தனர். பெருவெள்ளமாகப்பொங்கி எழும் சமூக மாற்றத்தில் அறிவில்லாத சிற்றூர் மக்களும் பழைய ஆதிக்கப்பண்ணையாளர்களும் ஒன்று கூடி வெள்ளையர் ஆட்சிக்குக் கொடிபிடித்த அலுவலர்களின் அடக்குமுறையை எதிர்க்கும் முன் முயற்சி உருவாகியது. வெளிநாட்டில் பலதுறைப் பயிற்சி பெற்ற இந்தியமக்கள் இந்த நாட்டு மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்ற உணர்வில் மன மாற்றம் பெற்றனர். காந்தியின் செல்வாக்கு சிற்றூர்களில் பரவி ஒன்றுமறியா மக்களையும் தேசியப் போராட்ட வீரராக மாற்றியது. எல்லோரும் ஒன்றுகூடினால் அன்னியர் ஆட்சியை எதிர்க்கும்வலிமை பிறக்கும் என்ற தன்னம்பிக்கை தளிர்த்தது. இத்தகைய இந்தியப்போராட்ட எழுச்சிகளின் துடிப்புகளை வெளிப்படுத்தும் சிறந்த நாவல்களாகக் கா சி. வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்', 'தேசபக்தன்கந்தன்' என்னும் இரு நாவல்களும் விளங்குகின்றன.

விடுதலைப் போராட்டக்காலத்தில் சிறிதளவு எழுத்தறிவு பெற்ற மக்களைத் தொடர்ந்து படித்து வரவும், அப்படிப் படிக்கும்போது நாட்டுப் போராட்ட உணர்வைப்பெறவும் கல்கியின் நாவல்கள் உதவின. காந்தி இயக்கம் இந்திய விடுதலைக்கு வலிமை ஊட்டத் தீண்டாமை என்ற நோயைப் போக்க முயன்றது. அந்தக்கருவை மனத்தில்கொண்டு கல்கியின் 'தியாகபூமி' (1939) வெளிவந்தது.

தேசிய உணர்வை வெளிப்படையாகக் கலந்து நாட்டு மக்களிடையே நாட்டு விடுதலை உணர்வைப் பரப்ப வேண்டும் என நேரிடையாக வெளிப்பட்ட நாவல் கா. சி. வேங்கடரமணியின் 'தேசபக்தன் கந்தன்' என்றால், குடும்ப வாழ்வில் தனிமனிதன் படும் துன்பங்களையும், கணவன், மனைவி மாறுபாடுகளையும் நீக்குவதற்கு நாட்டு விடுதலைப் போராட்டம் உதவும் என்ற கருத்தைப் பரப்பியது 'தியாகபூமி'. தேசியப்பின்னணியில் தீண்டாமை ஒழிப்புக்கும், தேசிய உணர்வில் குடும்ப ஒற்றுமைக்கும்வழிகண்டார் கல்கி. காந்தியண்ணலின் மது-விலக்குப் பற்றிய சுவடுகளையும் தேசியப் போராட்டத்தின் கொழுந்து-களையும் கல்கியின் 'மகுடபதி' வெளிக்காட்டும்.

இந்திய நாட்டில் எழுந்த தேசிய எழுச்சிகளின் விளைவாகப் பல போராட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் ஒன்று உப்புச்-சத்தியாக்கிரகம், அதில் கல்கி தாம்படைத்த 'அலைஓசை' மாந்தர்-களாம் தாரணி நிருபமா போன்ற இளம்பெண்களைப் பங்குபெறச் செய்கிறார். அக்கால இளைஞர்களிடையே தேசிய இயக்கம் பரவி-யிருந்ததின் விளைவு இது. எழுத்தாளர் கல்கியே தேசியப் போராட்ட வீரராக விளங்கியதால் 'அலை ஓசை' யாக அப்போராட்டத்தின் பேருருவத்தை நன்கு வரைந்துள்ளார். கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸில் 'அலைஓசை'யின் கதைமாந்தனாம் ராகவன் கலந்து-கொள்கிறான். அதைஒட்டி இளைஞர்களிடையே பலவகைக் கருத்துக் கிளர்ச்சிகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஹரிபுராவில் நடந்த காங்கிரஸ் சோசலிச மனப்பான்மை கொண்ட இளைஞர்க்குப் பேருக்கம் அளித்-ததைக் காட்டும். இதனால் தமிழகத்தின் சின்னஞ்சிறு ஊரான இராஜம்பேட்டையிலும் உழுவோரிடையே பழைய நில உறவுகளை எதிர்க்கும் புதிய போக்குகளுக்குரிய காரணங்களை 'அலைஓசை' புலப்படுத்துகிறது.

காங்கிரசின் மிதவாதப்போக்கு மாறி ஹரிபுரா காங்கிரசில் சுபாஸ் சந்திர போசின் தலைமையில் புது மாறுதல் பெற்றது. சுதேச மன்னராட்சி ஒழிய வேண்டும். தனிமனித ஆட்சியைவிட ஜனநாயக ஆட்சியே மேல். ஜனநாயகம் பேசிப் பிறமக்களை அடக்கும் அன்னிய பிரிட்டிஷ் ஆட்சியை விடச் சொந்த இந்திய மக்களின் ஆட்சியே மேல் என்ற கருத்து வளர்ந்து வந்ததை 'அலைஓசை' வெளிப்படுத்துகிறது.

படிப்பாளர்களிடையே இந்தியாவில் காணும் சாதி, மத, இனமொழிச் சண்டைகள் நீங்கப் பொருளாதாரப் புரட்சியே தக்க

மருந்து அவ்வுணர்வு பெற்றால் வெளிநாட்டு அரசியல்வாதிகளின் கைப்பாவையாக இந்தியமக்கள் ஆகமாட்டார்கள் என உறுதியாக நம்பிய நம்பிக்கை ஒளிவீசுவதைக் கல்கி தெளிவாகச் சுட்டியுள்ளார்.

'வெள்ளையனே வெளியேறு' என்ற போர்முரசு கொட்டிய 1942 ஆகஸ்டு இயக்கத்தில் நாட்டின் தலைவர்களெல்லாம் சிறை செல்லச் செயப்பிரகாசர் போன்ற புரட்சியாளர்கள் நாடெங்கும் தன்னாட்சி உணர்வைப் பரப்பியதையும் மலேசியாவிலிருந்து இந்தியத் தேசியப்படை திரட்டி இந்தியாவை விடுதலை செய்ய, சுபாஷ் சந்திர போசு முயன்றதையும் 'அலைஓசை' புகழ் மிக்க தேசியப் போராட்டச் செயல்களால் போற்றும்

காந்தி அண்ணலின் செல்வாக்கு 1930 - முதல் 1948 வரை எப்படி வளர்ந்து இந்திய தேசியப் போராட்டத்தை வழி நடத்திச் சென்றார் என்பதை அலைஓசை மணிஇடை இழையாகக் காட்டுகிறது. காந்தி அண்ணலின் மரணத்தில் தனக்கு வாழ்வு கிடைத்தாக 'அலை-ஓசை' யின் கதைத் தலைவி சீதா எண்ணினாள். ஆம், அதுவரை அவளிடமிருந்த செவிட்டுத்தன்மையும், குருட்டுத்தன்மையும் நீங்கு-கின்றன 'பென்ஹர்' என்ற நாவலின் ஏசுபிரானின் உரைகளைக் கேட்டபின்னர், பென்ஹரின் தாயும் உடன்பிறந்தவளும் தொழு நோயிலிருந்து நீங்கி உய்ந்தது போல 'அலைஓசை' சீதாவும் காந்தியின் அந்திம யாத்திரையின்பேசாக் காட்சியிலே பெறா-நிலையைப் பெறுமாறு படைத்துள்ளார் கல்கி. இத்தகைய போக்கு நாட்டுத் தலைவர்மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை உணர்த்தும்.

இந்திய நாவல்கள் காந்திய ஆற்றலைப் பலவழிகளில் காட்டி-யுள்ளன ஆர் கே. நாராயணனின் 'மகாத்மாவிற்காகக் காத்திருத்தல்' என்ற படைப்பும், இராஜாராவின் 'கந்தபுர'மும் முறையே காந்தியைப் பற்றிய தனிமனித உணர்வையும் சமுதாய மனப்பாங்கையும் வெளிப்-படுத்தும். முல்க்ராஜின் 'வாளும் அரிவாளும்' என்ற நாவலில், லால் என்னும் கதை மாந்தன் காந்தியின் திட்டத்தை மறுப்பான். ஜீனத்தின் படைப்பாம் ஜோரா என்பவள், காந்தியின் நெறியில் புரட்சிக்குப் புது வழிகாண்பான் ஆனால் கல்கியின் சீதா காந்தியைத் தனக்கு வழிகாட்டும் கடவுளாகவே உணர்கிறாள். இத்தகைய தனி மாந்தர்களைக் காட்டிலும் இந்தியாவின் பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் வாழும் எளியமக்கள், காந்தியின்றி இந்திய நாட்டுக்கு வேறு கதி மோட்சம் இல்லை என்று எண்ணிய உண்மைக் குரலைக் கல்கியின் 'அலைஓசை' ஒலிக்கிறது.

1942 ஆகஸ்ட் புரட்சி அலை நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. அப்புரட்சித் தீக்கங்குகளில் ஒருவனாகச் 'சோலைமலை இளவரசி'யில் காணும் குமாரலிங்கத்தைக் கல்கி படைத்துள்ளார்.

குடும்பத்தில் கணவன் மனைவியரின் மாறுபாடு தேசிய இயக்கத்தின் அடிப்படையிலும் விளைகிறது என்ற நிலையை அகிலனின் 'பெண்' என்ற நாவல் விரிவாகக் காட்டும். ஐ. சி. எஸ் ஆக விரும்பி இங்கிலாந்து சென்ற சந்தானகிருஷ்ணன் இந்தியர்கள் அடிமைகளாக நடத்தப்பெறுவதை உணர்ந்து ஐ. சி. எஸ்ஸையே உதறிவிட்டு இந்தியவிடுதலை இயக்கத்தில் புகுந்தான் ஆனால் அவன்மனைவி வத்சலாவோ அதைத் தாங்கமுடியாமல் கணவனையே புறக்கணிக்கிறாள். இருவர் மாறுபாட்டில் தேசியத் தியாக வாழ்வு எனும் தீயில் தன்னல ஆணவம் பொசுங்கப் பெண்ணின் பெருமை தேசிய ஒளியில் கலக்கின்றது. சக்தியின் வடிவாகப் பெண் எழுந்தால் இந்தியவிடுதலை இயக்கம் வெற்றி பெறும் என்பதை அகிலனின் 'பெண்' காட்டும். அவருடைய மற்றொரு நாவலாம் நெஞ்சின். அலைகள்(1953) காதலுக்குச் சாதியையும் உறவையும்விடப் பணமே முதல் எதிரி எனக்காட்டுவதுடன் பர்மாவில் நேதாஜியின் இந்திய-தேசீயப் படையில் சேர்ந்து பணிபுரிவதைச் காட்டித் தேசீயமும் காதலும் இணைவதைச் சுட்டும். அன்னியமண்ணில் இந்தியர் படும் வேதனையும், நேதாஜியின் தலைமையின் கீழ் அவர்கள் ஒன்று திரண்டு இந்தியவிடுதலைக்குப் போராடும் அரசியல் போக்கும் இந்நாவலை வழி நடத்திச் செல்லும். கல்கியின் 'அமரவாழ்வு' போல அகிலனின் 'நெஞ்சின் அலைகளும்' அரசியல் விடுதலைப்போராட்டம் இன்று தோற்றாலும் நாளை வெல்லும் என்ற உணர்வை ஊட்டும். வி ஏ எம். என்பவர் எழுதிய 'உள்ளுக்குள்ளேயே' என்ற நாவலும் இந்நெறியில் இந்திய தேசியப் படைவீரர் வாழ்வை, ஆசிரியரின் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துரைக்கும்.

ஆகஸ்டு போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற கு ராஜ வேலு தாம் பெற்ற அனுபவத்தை 1942 என்ற நாவலாகத் தந்துள்ளார். அன்னிய ஆதிக்கத்தின் காட்டுமிராண்டித்தனத்தை இந்த நாவல் நன்கு வெளிப்படுத்தியுள்ளது. விடுதலை வீரர்கள் தத்தம் இறந்த தந்தைக்கு இறுதிக் கடன் செய்ததைக் கூடத் தடுத்தது வெள்ளையர் ஆட்சி. அன்னியரின் கொடிய ஆட்சி எவ்வளவு அடக்கு முறையைக் கையாண்டாலும் தேசீயத்தொண்டர்களிடையே நாட்டுப் பற்றும் தியாகப்பண்பும் குன்றிலிட்ட விளக்காக ஒளிவீசுவதை 1942

என்னும் நாவல் நன்கு விளக்குகிறது. சிறைவாழ்வில் காரல்மார்க்சு, நேரு போன்றவர்களின் பார்வையில்தொண்டர்கள் சிந்தித்துப் புதிய தெளிவு பெறுவதையும் இந்நாவல் அறிவிக்கிறது. இதனால் இளைஞர்களிடையே அன்னிய ஆட்சியை எதிர்க்கும் அரசியல் நோக்கும் சோசலிசப் பொருளாதாரப் போக்கும் தென்படுகின்றன.

ரா. சு. நல்லபெருமாளின் 'கல்லுக்குள் ஈரம்' என்ற நாவல் தமிழகத்தின் தென்பகுதியில் நடைபெற்ற விடுதலை இயக்கத்தின் இருபெரும் போக்குகளைச் சுட்டிக்காட்டுகிறது காந்தியப் போக்கிற்கும் வன்முறைப்போக்கிற்குமுள்ள மோதல்களைக் கூறி இறுதியில் காந்தியக் கருத்துக்களைத் தம் கதை மாந்தர்கள் ஏற்கும் வகையில் 'கல்லுக்குள் ஈரம்' வளர்ந்து செல்கிறது.

விடுதலைப் போராட்டத்தில் மதுரை நகர் பெரும்பங்கு வகித்தது. அதனை ஒட்டி எழுந்த பல செயல்களை நா. பார்த்தசாரதி எழுதிய 'ஆத்மாவின் ராகங்கள்' இசைக்கும் தியாகத் தீயாக வளர்ந்த காந்திராமனும் அவன்பால் அன்புத் தீயாக வளர்ந்த-மதுரமும் போராட்டங்களில் காந்திய ஆற்றல்களாக உருவாவது புலனாகும். இதைப்போன்றே சிதம்பர சுப்பிரமணியத்தின் 'மண்ணில் தெரியுது வானம்' என்ற நாவலும் வளர்ந்து செல்கிறது தேசிய சேவாதள நாவல் மாந்தராக உலவவிடுவது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

ஜெயகாந்தனின் 'ஜய ஜய சங்கர' என்ற நாவலில் காணும் சதாசிவ ஐயர் பாரதி பாடலில் ஈடுபட்டுத் தேசியப் போராட்டத்தில் மூழ்கிய வாழ்வை நன்குணர்த்தும். உயர்ந்த சாதியில் பிறந்தவர், தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டுப்படும்பாட்டையும் அவருடைய மக்கள் புதியநெறியில் நாட்டைக் காணவிரும்பும்போது எதிர்ப்படும் சிக்கல்களையும் விளக்கிக் காட்டும். சுருக்கமாகக் கூறினால் தேசியப் போராட்டத்தின் தோற்றத்தையும் அதன்பின் விளைவையும் பல்வேறு தேசியச் சிந்தனைஓட்டங்களின் கூறுதுறையாகத் தமிழ் நாவல்கள் விளங்குகின்றன தேசியப் போராட்டத்தின் ஏற்பட்ட பல்வேறு அவலநிலைகளையும் 'பொன்மலர்' 'நெற்றிக்கண்' 'சத்திய வெள்ளம்' 'திருடர்கள்' போன்ற நாவல்கள் சுட்டும் காந்தியவழிகாலத்திற்கேற்றது என்பதை அகிலனின் 'பால்மரக் காட்டினிலே' (1976) என்ற நாவல் கூறும். மேஜர் தி. சா. ராஜுவின் 'காட்டாறு' இந்தியாவுடன் ஐதராபாத் சமஸ்தானத்தை இணைக்க அங்கு

ரஜாக்கர்களுக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தை நன்கு விளக்கும். கோவாவில் போர்ச்சுக்கீசிய ஆட்சிக்கு எதிராக எழுந்த மக்கள் விடுதலை இயக்கத்தை வரலாற்றுப் பின்னணியுடன் சிறப்பாக எடுத்துரைப்பது ராஜம் கிருஷ்ணன் 'வளைக்கரம்'. இந்த நாவல் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஒரு இணைப்புப் பாலமாக விளங்குகிறது. கோவானியப் பெண்கள் அணியும் மங்கல அணியான கண்ணாடி வளையல் அவர்களுடைய கற்பு வாழ்வைக் காட்டும் அடையாளம். அது நாட்டின் கற்பாக மாறி 'நமக்கொரு கொடி' 'நமக்கொரு நாடு' என்ற உணர்வைத் தூண்டும் நாட்டுப்பற்றாக 'வளைக்கரம்' என்ற நாவல் ஒழிக்கிறது பல்வேறு கொள்கைகளை மோதவிட்டு வன்முறைப்போராட்ட செயல்களுக்கு மாற்று மருந்தாக ராஜம்கிருஷ்ணனின் மற்றொரு படைப்பான 'வேருக்கு நீர்' என்ற நாவல் வழிகாட்டுகிறது

குறிப்பிடத்தக்க நிலையில் தமிழ் நாவல்கள் இந்திய தேசியப் போராட்டத்தின் தாக்கத்தைப் பெற்று உருவாகியுள்ளன. தேசியப் போராட்டத்தால் எண்ணங்களையும் செயல்களையும் வெளிப்படுத்தியதில் தமிழ் நாவல்களின் பங்கு சிறப்புடையது. வளர்கின்ற வரலாற்றில் தேசியப் போராட்டத்தின் கடந்தகால எழுச்சிகள் நிகழ்கால விளைவுகள் எதிர்கால நோக்கங்கள் ஆகியவற்றையெல்லாம் சுட்டிக்காட்டும் கலங்கரைவிளக்கமாகத் தமிழ் நாவல்கள் துலங்குகின்றன

பாரதியின் காவியத்தில் நீதிக் கற்பனை

தருமத்தின் வாழ்வு தனைச்சூது கவ்வும்
தருமம் மறுபடிவெல்லும் எனுமியற்கை

மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்;

கருமத்தை மேன்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்

தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுஉண்டு காண்டீவம் அதன் பேர் என்றான்.

கடல் கடந்த கண்ணன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

—பழநி. அரங்கசாமி

நியூயார்க்கில் தொடங்கிய விமானப் பயணம் இனிதாக முடிந்தது. சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் அன்று பிரபுபாத சுவாமிகளை வரவேற்க ஒரு பெருங் கூட்டமே திரண்டிருந்தது அந்த நகரமே சுவாமிகளுக்குப் புதியது. கூடியிருந்து வரவேற்றோரில் பெரும்பாலோர் புதியவர்கள் தாம். கடல் கடந்து சென்ற கண்ணனின் பெருமை அயலகத்து மண்ணிலும் ஆழமாக வேரூன்றித் தழைக்கிறது என்பதற்கு வேறு சான்று வேண்டுவதில்லை

முகுந்தா, அவரது துணைவியார், ரவீந்திரசொரூபன், ஆலன் கின்ஸ்பர்க் ராயராமன் ஆகியோர் மட்டுமே சுவாமிகளுக்கு முன்னமேயே அறிமுகம் ஆனவர்கள், இருபுறமும் வரிசையாக அந்தக் கூட்டம் ஏனைய விமானப் பயணிகளுக்கு வழி விட்டு நின்று கொண்டது. ஒவ்வொருவர் கையிலும் ஊதுவத்தியும், மலர்க் கொத்தும் முகத்திலோ ஆர்வமும் மகிழ்ச்சியும் திடீரென்று அரே கிருஷ்ண மந்திரத்தின் ஒலி — சுவாமிகள் விமானக் கூடத்திற்குள் வருவது தெரிந்துவிட்டது முகுந்தா கொடுத்த பயிற்சியின் வண்ணம் தூய துவராடையைக் கண்டவுடன் வரவேற்கக் கூடியிருந்த அமெரிக்க இளைஞர் அனைவரும் தம்மை அறியாமலேயே கிருஷ்ண மந்திரத்தை இசைக்கத் தொடங்கி விட்டனர்.

பொன்னிற மேனி! வெளிர் நிறமான காவியுடை! கை கூப்பிய வண்ணம் இரண்டு வரிசைகளுக்கு இடையில் வந்த சுவாமிகளுக்கு மலரும், மாலையும், ஊதுவத்தியும் கொடுத்து அமெரிக்க அன்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர். விமானத்தில் கொணர்ந்த தனது பெட்டியை எடுத்துக் கொள்வதற்காகச் சுவாமிகள் காத்துக் கொண்டிருந்த போது அன்பர் குழாம் அவரைச் சூழ்ந்து கொண்டது. உணர்ச்சி பரவசத்தால் அவர்கள் 'அரே கிருஷ்ணா' என்று உரக்க ஒலித்த போது சுவாமிகள் அந்த மூல மந்திரத்தை பாடல் போல் இசைத்தார். அவர்களும் இசைத்தனர். பாடலின் லயத்திற்கேற்ற கையசைப்பும் தலையாட்டமும் ஒரு நடன நிகழ்ச்சி போல அமைந்து விட்டது.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு அனைவரும் பின் தொடர சுவாமிகள் விமான கூடத்தின் வெளிப்புறம் வந்தார். கப்பல் போன்ற கெடில்லாக் கார் ஒன்று காத்திருந்தது முகுந்தாவும், ஆலனும் சுவாமிகளுடனே காரில் ஏறிக் கொண்டனர். முன்னமேயே அறிமுக-மாகிய சீடருள் ஹார்வே என்பாரை மட்டும் அன்று விமான நிலைய வரவேற்பில் காணவில்லையே என்று எண்ணினார் சுவாமிகள்.

—இந்தக் கூட்டததில் ஹார்வேயைக் காணவில்லையே என்றார்.

—'நான் தான் கார் ஓட்டிக் கொண்டிருக்கிறேனே, சுவாமி' கருநீல கால் சராய், தாடி, நீண்ட தட்டைத் தொப்பி அணிந்து கொண்டு காரோட்டிக் கொண்டிருந்த ஹார்வேயை சுவாமிகளால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இப்படி பெருத்த வர-வேற்போடும் கிருஷ்ணாய இயக்கத்தின் பணி அமெரிக்க நாட்டின் சான்பிரான்ஸ்கோவில் தொடங்கிய பின் மேற்குப்புற நகரங்களில் பரவத் தொடங்கியது.

ராதாகிருஷ்ண கோவிலுக்கென்றும், சுவாமிகள் தங்குவதற்கு ஒன்றுமாக இரண்டு வெவ்வேறு இடங்களை ஆஷ்பரி பகுதியில் பிரடெரிக் தெருவில் முகுந்தாவும், அவரது நண்பர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். காரிலிருந்து இறங்கி நேராக வழிபாட்டிற்காக இருந்த அறையினுள் நுழைந்து இருக்கையில் அமர்ந்தார் சுவாமிகள். சிறிய சொற்பொழிவும் கீர்த்தனையும் நிகழ்ந்தது கிருஷ்ணாய இயக்கத்தில் சேர்ந்து ஒவ்வொருவரும் தங்களைப் புனிதப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார் சுவாமிகள்.

வழிபாட்டு நிகழ்ச்சி முடிந்து தங்குமிடத்திற்குச் செல்லும் போது ஆன்மீகத் தொண்டர்களோடு பத்திரிக்கை நிருபர்களும் இருந்தனர். சான்பிரான்சிஸ்கோ நகரில் புகழ் வாய்ந்த செய்தித் தாள்களான கிராணிக்கிள், எக்சாமினர் ஆகியவற்றின் இரண்டு நிரு-பர்களும் அதில் அடங்குவர். சுவாமிகளுக்கு எதிரே தரையில் அமர்ந்து குறிப்பெடுத்துக் கொண்டனர். கேள்வி—பதில் கீழ்வருமாறு அமைந்-திருந்தது

கேள்வி : கிருஷ்ணாய இயக்கத்தில் அனைவரும் சேருமாறு அழைக்கிறீர்களே! குடிகாரர்கள், ஒழுங்கீனம் உள்ளோர் ஆகியோரை-யும் சேர்த்துக் கொள்வீர்களா?

பதில் : எவரும் இந்த இயக்கத்தில் சேர்ந்து கொள்ளலாம். ஹிப்பிகள் உட்பட. சேர்ந்த பிறகு அவர்கள் முன்னர் இருந்த நிலை-யிலிருந்து பெரிதும் மாறி விடுகிறார்கள்.

கேள்வி : இந்த இயக்கத்தில் சேர்வதற்குரிய நியதிகள் யாவை?

பதில் : நான்கு நியதிகள் உண்டு.

(i) எந்த சீடரும் தங்களுக்கென்று மகளிரை நண்பர்-களாகக் கொள்ளக் கூடாது.

(ii) காபி, தேநீர், சிகரெட், மட்டுமன்றி எந்தவிதமான போதைப் பொருளும் அருந்தவோ புகைக்கவோ கூடாது.

(iii) புலால் உணவை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது.

(iv) சூதாட்டம் எதிலும் ஈடுபடக் கூடாது அதிகாலை-யில் எழுந்து, நீராடி விட்டு, வழிபாட்டுக் கூட்டங் களில் கலந்து கொண்டு தனக்கு இட்ட பணியினைச் செய்ய வேண்டும்.

மேலோட்டமான நித்திய கருமங்களைப் பற்றிய கேள்விகளைத் தான் நிருபர்கள் கேட்டனரே ஒழிய கிருஷ்ணாய தத்துவத்தைப் பற்றி ஏதும் கேட்கவில்லை. இருப்பினும் தனது சீடர்களை மனதிற் கொண்டு சுவாமிகள் பேசத் தொடங்கினார். "இன்றைய நாகரிகத்-தின் மிகப் பெருந்தவறான செயல் என்னவென்றால், பிறன் பொருளை யும் தன் பொருளாக எண்ணி, அதனைக் கவர எண்ணுவது தான். விண்ணிலும் மண்ணிலும் பரந்து நிற்கின்ற இந்தப் பிரபஞ்சத்தின் அனைத்துப் பொருள்களும் ஆண்டவனுக்கே உரியவை. நாம் அதனைத் துய்ப்பதற்கே உரிமைப் படைத்தவர்கள் எனும் எளிய உணர்வும் தன்னலமற்ற பெருந் தகைமையும் நிலை கொள்ளும் போது உலகில் அமைதி நிலவும்''.

சுவாமிகளின் அருளுரை முடிந்ததும், முகுந்தாவும், அவரது துணைவியார் ஜானகியும் புதிய உறுப்பினர்களையும் நண்பர்களை-யும் அறிமுகப்படுத்தினர் விமானப் பயணம் எப்படி இருந்தது என்று ஜானகி கேட்டார். "அமெரிக்க மண்ணில் ஒரு பகுதியிலிருந்து மறுபகுதிக்கு விமானப் பயணம் செய்தது புதுமை தான். விமானத்தி-

லிருந்து கீழே பார்த்தால் வீடுகள் கட்டிடங்கள் எல்லாம் நெருப்புப் பெட்டிகளாகத் தெரிந்தன '' என்றார் சுவாமிகள். மதிய உணவுக்-குரிய நேரம் வந்தது. உண்ணுதற்கும் சற்றே ஓய்வெடுத்தற்கும் ஏற்ற முறையில் கூடியிருந்தோர் அனைவரும் வெளியில் வந்து விட்டனர். சுவாமிகளின் எளிமையும், இனிமையும் கலகலப்பான பேச்சும் கருத்துத் தெளிவும் அனைவரையும் கவர்ந்து விட்டன என்பதில் ஐயமில்லை சுவாமிகள் ஸான்பிரான்சிஸ்கோ வந்ததும், அவர் வரவேற்கப்பட்டதுமான செய்திகள் அன்று இரவு (டெலிவிஷன்) தொலைக் காட்சியில் ஒளிபரப்பினார்கள். விரிவான செய்திகள் மறு நாளைய தினத்தாள்களில் வெளியாகி இருந்தன கிராணிக்கிள் பத்திரிகையோ — ஹிப்பிகள் நாட்டில் சுவாமிகள் என்ற தலைப்பில் அவரது புகைப் படத்தையும் அச்சிட்டிருந்தது. கட்டுரையிலோ சுவாமிகளை ஒரு பழமை விரும்பி போல (conservative) விவரித்து எழுதியிருந்தார்கள்.

" நீங்கள் நினைப்பது போல யானோ இந்த இயக்கமோ பழமை நோக்குடையது அல்ல இந்தியாவின் அறநூல் நெறிப்படி ஒழுக வேண்டும் என்பதிலே வேண்டுமானால் பழமை எனலாமே தவிர, காலத்துக்கேற்ற புதுமையினை ஒதுக்கி விடுவதில்லை. எமது ஆன்ம குருவான சைதன்ய மகாப்பிரபு பெண்களின் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவர். ஆனால் நாங்களோ சில நியதிகளுக்கு உட்-பட்டு பெண்களையும் எமது பேரியக்கத்தில் சேர்த்துக் கொள்கிறோம் " என்றார் சுவாமிகள்.

பயண அலுப்பிலும், களைப்பிலும் அன்றிரவு அயர்ந்து தூங்-கினார் சுவாமிகள் ஏதோ தன்னிச்சையாக இடையில் விழித்துப் பார்த்த போது இரவு மணி இரண்டு குளிர் சற்று அதிகம் அமைதி-யான சூழ்நிலை. கண்ணனை மனதில் எண்ணி மெல்லிய குரலில் அரே கிருஷ்ணா மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார். ஒரு மணி நேரம் இப்படியே. தூக்கம் போன இடம் தெரியவில்லை. ஆன்மிகக் கண்கள் அகல விழித்துக் கொண்டன. வெள்ளைத் தாள்களைத் தனக்கு முன்னே இருந்த தகரப் பெட்டியின் மேலே வைத்துக் கொண்டார். பேனா மூடியைத் திறந்து எழுதத் தொடங்கினார். அணை திறந்த வெள்ளம் போல் தடைபடாத எழுத்தோட்டம். தெய்வீகச் சிந்தனை ஊற்றுப் பெருக்காய் வழிந்தோடியது. வயது அதிகமானாலும், வளமான சிந்தனை, தெளிவான கையெழுத்து, சுவாமிகளின் கூடப் பிறந்த சொத்துகள்.

பாகவதத்தின் முதல் காண்டம் ஆங்கில மொழி பெயர்ப்பும் அரும்பொருள் விளக்கமுமாக மூன்று பகுதிகள் வெளிவந்துவிட்டன. கீதையின் பெயர்ப்பு கையெழுத்துப் பிரதியாக இருந்தது எங்கோ தொலைந்து விட்டது 1965-இல் அமெரிக்க மண்ணில் அந்தப் பணியினை மீண்டும் துவக்கி விட்டார் ஆங்கிலப் பேராசானாக இருந்த ஹயக்ரீவன் ஒரு பார்வை பார்த்துக் கொடுத்தால், கீதையை அமெரிக்காவிலேயே வெளியிட்டு விடலாம் அது ஒரு பெரும் சாதனை யாகவும் அமைந்து விடும் என்று எண்ணினார் சுவாமிகள். கீதை-யோடு சைதன்ய சரிதாமிருதம் எனும் நூலையும் பெயர்த்துக் கொண்டிருந்தார். சைதன்யரின் வாழ்வும் வாக்கும் அடங்கிய இப்-பெருநூல் வைணவ இலக்கியங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)

வ. உ. சி. நூற்றாண்டு விழா

நெல்லை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தூத்துக்குடி பகுதி அண்மைக் காலமாக வ. உ. சி. மாவட்டம் என்று அழைக்கப்-படுகிறது. தமிழக அரசின் சார்பில் சிதம்பரனாரின் நூற்றாண்டு விழா நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் தமிழக மக்களுக்கு ஓரிரு இன்றியமையாத வரலாற்று உண்மை களை நினைவு படுத்த வேண்டும். வாணிக ரீதியில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்க வ. உ. சி. கப்பல் கம்பெனியைத் துவக்கிய போது அக்கம்பெனியின் தலைவராக இருந்தவர் பாண்டித்துரைத் தேவர் அவர்கள். தனது ஆளுகைக்கு உட்பட்ட சில கிராமங்களில் இருந்த சொந்த நிலங்களை விற்று அந்நாளிலேயே ஒரு லட்ச ரூபாய் பங்குத் தொகையும் ஈந்தார். அதில் வரும் லாப ஈட்டுத் தொகை மதுரையில் தாம் தொடங்கிய நான்காம் தமிழ்ச் சங்கத் துக்குச் சேரவேண்டும் என்று பத்திரம் எழுதப்பட்டிருந்தது. சேலம் விஜயராகவ ஆச்சாரியார் கப்பல் கம்பெனியின் வழக்கறிஞராக நியமிக்கப் பெற்றார். ஆங்கிலப் பேராட்சியின் சூழ்ச்சியினால் கம்பெனி லாபகரமாக இயங்க முடியவில்லை என்பது தான் வரலாறாயிற்றே!

இரட்டைக் காப்பியங்களின் பெண்களின் மதிப்பு

பேரா. வ. இந்திர பவாநி, எம். ஏ. எம்,ஃபில்;
பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

0.1. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதற்கு இணங்க, ஒரு குழுவினரின் கட்டுக்கோப்பான வாழ்விற்கென, அற்றைக்-காலத்தில் பொருளாதார வசதியுடையவர்களாலோ, அறிவுத்திறம் பொருந்தியவர்களாலோ உடல் உரம் மிக்கவர்களோலோ இத்தகை-யோரின் கூட்டு முயற்சியாலோ, சில விதிமுறைகள் அமைக்கப்-பட்டன. அந்த விதிமுறைகளே பிற்காலத்தில் அவ்வச்சமுதாய அமைப்பின் தளமாயின. இது உலகெங்கணும் நிலவுவதை மறுக்க இயலாது.

0.2 காலப்போக்கில் சமுதாய இறுக்கங்கள் மனித ஆன்மாவை அறையும் அளவிற்கு நிறம் மாறிப் போவதை உலகியல் நடப்புக்கள் உணர்த்துகின்றன.

0 3. இலக்கியச்சான்றுகள் கிடைக்கும் சங்க காலம் முதல் ஏறத்தாழ 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆண்பெண் சமத்துவம் தமிழுலகில் இல்லை என்பது ஒரு கசப்பான உண்மை காலம் காட்டும் கண்ணாடியான இலக்கியங்கள் ஆணாதிக்கத் தமிழ்ச் சமுதாயத்தையே இலைமறை காயாக உணர்த்துகின்றன.

0.4. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நின்று கொண்டு, கடந்து போன நூற்றாண்டுகளில் பார்வை செலுத்தும் போது, பெண்களுக்கு உரிமைகொடுப்பதில் நாம் ஓரளவு பின்தங்கிக் கிடந்துள்ளதை உணர-லாம். மேலும் நடுநிலையில் நின்று இதனை ஆராய்வோர், கடந்த காலத்தில், ஆணாதிக்கத்தின் கீழ் பெண்மை மிதிப்புண்டு அவலப்-பட்டிருந்ததனை முழு மனதுடன் ஏற்பர்.

0.5. மேற்குறித்த கோணத்தில் இரட்டைக் காப்பியத்தில் பெண்களின் மதிப்பை (The Value of women) புலப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்

1 1. அன்றைய சமுதாயம், ஆணின் போகப் பொருளாகவே, பெண்ணைக் கருதிற்று. விரும்பிய போது நுகர்ந்து, அலுத்தபோது ஆடிக் கழித்த பூவாக, பதனீர் குடித்து எறிந்த ஓலையாய்ப் பெண்ணைத் தள்ளி நகர்ந்த ஆணின் ரசனைக்குச் சிலம்பின் தலைவியர் கண்ணகி, மாதவியே தலைமைச் சான்றாவர்.

1.2 தம் காலத்திற்கு முன்பே சமுதாயத்தில் வேரூன்றி இருந்த 'குலமகளிர், பரத்தை' எனும் பெண்ணினப் பகுப்பு, காப்பிய காலத்தில் தொடர்ந்தது. பரத்தையரிடம் அலைபாயும் உள்ளமுடைய ஆடவரால் குலமகளிர் என்ற வாழ்வில் நிம்மதி இல்லை. திருமணம் என்ற கட்டில்லாமல், தன்னை விரும்பிய ஆடவர்க்குத் தன் விருப்பு வெறுப்பைப் புறந்தள்ளித் தன் அழகை விற்று வாழ்வு பெற வேண்டியவரே பரத்தையர் எனும் சமுதாய எதிர்பார்ப்பால் பரத்தையர் வாழ்விலும் பாதுகாப்போ, இயற்கையான மனநிறைவோ இல்லை. பரத்தமையைத் தலைமுழுகி, ஒருவனோடு மட்டுமே தான் வாழ விரும்பிய மகளிரும் அன்று இருந்துள்ளனர் எனினும் ஆடவன் ஒருவனைக் கணவன் ஆக்கிக் கொள்ள அரசின் சமுதாயச் சட்டம் எதுவும் துணை புரிந்ததாகவோ, இருந்ததாகவோ தெரியவில்லை. ஆனால் 'கணவன்' எனும் உறவை ஸ்தாபித்துக் கொள்ள முடியாத அச்சூழலில், 'கணவன்' ஸ்தானத்தில், ஒருவனை வாழ்நாள் முழுக்கத் தன்னோடு இருத்தி வாழ அன்றைய சமுதாய வழக்கம் அவளை அனுமதித்தது. எனினும் அது அவளுக்கு உத்தரவாதமற்ற வாழ்வாதலின் அந்த ஆண் துணையை வாழ்வில் என்றும் தக்க வைத்துக் கொள்ள, அந்த அபலை, மயக்கும் அழகையும் வியக்கும் கலைகளையும் துணையாக்கிக் கொள்ள வேண்டியது இன்றி அமையாதது ஆயிற்று. ஆக, பரத்தை ஒருத்தியின் ஒரே ஒரு நிரந்தர ஆண்துணையுடனான வாழ்வு, வேறொரு குலமகள் வாழ்வின் வேரில் வைத்த வெடிகுண்டாகவே அமைய வேண்டி இருந்தது. இவ்-உண்மைகளின் நிதரிசனமாகவே, மாதவி, கண்ணகி வாழ்வு நிற்கின்றது.

1.3. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' எனும் மனித நேயமற்ற ஊனக் கொள்கையைத் தம் வாழ்வில் சத்தியப்படுத்தி, அளவிலாப் பொறுமையோடு, கணவன் இழைக்கும் துன்பங்களை வெளிப்படுத்தவும் செய்யாது, புன்முறுவலோடு (பொய்யாக வேனும்) வாழும் பெண்கள் தலையில் 'கற்பு' மகுடம் சூட்டி அன்றைய மக்கள் போற்றினர் பிரிந்த கணவனை மனைவி-

யோடு கூட்டி வைக்கும் அறிவார்த்தமான சட்டபூர்வமான, அரசு துணை நிற்கும் அணுகு முறைகள் அன்று அமுலில் இல்லை .மாறாக, 'சோம குண்டம், சூரிய குண்டம்' எனும் குளங்களில் மூழ்கிக் காமவேளுக்குப் பூஜை செய்தால் பிரிந்த கணவன் கிடைப்பான்' எனும் கவைக்குதவாத அறிவுரைகள் (சிலம்பு : கனாத்திறமுரைத்த காதை 1245-1248) காலந்தோறும் போதிக்கப்பட்டன. உயிருள்ள போது வாழ வேண்டிய பருவத்தில், மங்கல வாழ்வைச் சேதமின்றிப் பெற்றுக்கொள்ள எவரும் உதவ வராத சூழலில், நடைபிணமாக்கப்பட்ட கண்ணகி தன் கணவன் பழி துடைத்துத் தன் உயிரை விட்டபின்பு தெய்வமாக்கப்படுகின்றாள். இச்செயல் பெண் பிறவியை ஒரு பொருட்டாகக் கருதாத ஒரு சமுதாய இயல்பினைக் காட்டுகிறது அல்லவா !

1.4. கணவன் இறந்த கணத்திலேயே அவன் மனைவின் உயிரும் அகலுமாயின் (உயிரெனத் தன் கணவனைப் பேணும் பெண்களாக இருப்பினும் அவர்கள் எல்லோருக்கும் அது வாய்க்குமா?) அவள் தலைக்கற்பினள். அது வாய்க்காவிடில், எரியூட்டி அதில் மூழ்குவாள். (தற்போது இது தற்கொலை, அல்லது 'சதி' - சட்டப்படி குற்றம்) ஆயின் அவள் இடைக்கற்பினள்; அதற்குத் துணிவு இல்லாதவள், அறுசுவை நீக்கி, அலங்காரம் அகற்றி, பாயும் விடுத்துத் தரையில் உறங்கி, வெறும் சோற்றில் நீர் கலந்து உண்டு, கைம்மை நோன்பில் வாழ்ந்து மடிய வேண்டும் என்பது சமுதாய விதி. இப்படி வாழ்வு ஏற்பவள் கடைக்கற்பினள். இந்தக் கற்பிலக்கண அநாகரிகமே அன்று பெண்ணின் பண்பாடாகப் பேசப்பட்டது. (சிலம்பு 18 : துன்பமாலை 2950-2962)

1.5. கண்ணகி குறிப்பிடும் ஏழு பத்தினிகள் (சிலம்பு - வஞ்சின மாலை 3130-3160) பற்றிய செய்திகள் அன்றைய பெண்களின் பேதமையை, அறியாமையை, குருட்டுக் கொள்கைகளை, பொறுப்பின்மையை, உணர்த்துவனவாக உள்ளன.

1.6. பொதுவாக இரட்டைக் காப்பியத் தோற்றம் வரை, அவையில் அரசனுக்கு இணையாக அரியணையில் அரசமாதேவி அமர்ந்திருந்த குறிப்பு, தமிழ் இலக்கியங்களில் இல்லை. அங்ஙனம் அவளை அமர்த்திய பெருமை சிலம்பின் காலத்திற்கு உரியது. ஆனால் அங்ஙனம் அமர்த்தப்படும் உரிமை பெற்ற அவளது ஊடலே, திருடாத கோவலனைத் திருடன் என ஆராயாது ஏற்க வைத்து,

அதுமட்டுமன்றித் திருடனுக்குத் தரவேண்டிய தண்டனைக்கு அதி மிகையான கொலைத் தண்டனையைத் தரும்படி அவசரத் தீர்ப்பை அளிக்கும் நிலைக்கு மன்னவனைத் தள்ளிற்று எனும்போது பெண்ணை வானளவு உயர்த்திக் காலடியில் உருட்டிய இழிவு புலனாகிறது.

1.7. 'தன் குழந்தையைக் கடித்துக் குதறிக் கொன்று விட்டிரு' எனும் அவசர முடிவால் பார்ப்பனி ஒருத்தி ஒரு கீரிப் பிள்ளையைக் கொன்று விட்டாள் 'அது பாவச் செயல்' எனக் கருதிய அவள் கணவன், அவளுடன் ஆன தன் உறவுப் பிணைப்பைக் கத்தரித்-தான். எவராவது ஒருவரிடம் இரந்து பெறும் பொருளால் அந்தப் பாவத்தைக் கழுவிய பின்னரே மறுபடி தன்னோடு அவள் வாழ்-வேற்க முடியும் எனும் இக்கட்டான நிலையில் அவளை நிறுத்தி விட்டு, வடபுலப் பயணம் மேற்கொண்டு அகன்றான். இந்த நிலையை விளக்கி, தன் கணவனே எழுதித் தந்த சமஸ்கிருத ஓலையை எதிர்ப் படும் நபர்களிடம் எல்லாம் காட்டித் தனக்கு உதவும் படி அவள் மன்றாடி அலைந்தக் காட்சி சிலம்பில் (15 அடைக்கலக் காதை : 2384 – 2393) இடம் பெறுகிறது 'இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து நின்று வாழ்வோம்' என அக்னி முன் சத்தியம் செய்து நடந்த திருமண முறைகளையே ஏளனம் செய்வதாக இந்தப் பார்ப்-பனன் செயல் அமைவது ஒரு புறம் இருக்கட்டும் ; அதே வேளை-அவன் மனைவியாம் பெண்ணின் வாழ்க்கை முகத்தையே சிதைத்து அழித்ததாக அமையும் செயல் அல்லவா இது ?

2.0 சிலம்பின் தொடராக அமையும் மணிமேகலையும், பெண்-ணின் தாழ்நிலையை உணர்த்துவதில் எள்ளளவும் சோடை போக வில்லை. இக்காப்பியத்தில் மாதவி மகள் மணிமேகலை கதை தொடர்கிறது

2.1. பரத்தமை வாழ்க்கைக்குக் கால்கோள் நடும் அரங்கேற்றத்-திற்கே தன் மகள் மணிமேகலையை அனுப்பாமல் தவிர்த்து விடு-கிறாள் மாதவி. பரத்தமைத் தளைகளில் இருந்து தம்மை விடுவிக்க முனையும் ஒரு நல்ல மனத்தின் நியாயமான முயற்சி இது. அம்-முயற்சிக்கு, மணிமேகலையின் பாட்டியும் மாதவியும் தாயும் ஆன சித்ராபதியாலேயே தடைகள் எழுப்பப்படுகின்றன. 'மணிமேகலையை மாதவியிடமிருந்து மீட்டு, பரத்தமைத் தொழிலில் தான் ஈடுபடுத்தா-விடில் தனக்கு அது அவமானமென்றும் அங்ஙனம் தான் அடைந்த

அவமானத்தைத் தன்னினத்தார்க்கு உணர்த்தச் செங்கற்ளைத் தலையில் தாங்கிக் கலையரங்கத்தைச் சுற்றி நடந்து, தம்மினத்தார் வீடுகளிலேயே நுழையாமல் இருப்பதன் வழியே, தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளப் போவதாகச் சபதம் (மணிமேகலை : 18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை 1997–2001) ஏற்கிறாள். அது மட்டுமல்ல. மணிமேகலை மீது காமக் கண் பதித்திருந்த இளவரசன் உதயக்குமரனிடம் சென்று மணிமேகலையைப் பெற வழி சொல்லித் தரும் தரகு வேலையையும் மேற்கொள்கிறாள். (மணிமேகலை : 18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை. 2002 — 2077)

2.2 மணிமேகலை மீது ஒரு தலைக் காமம் கொள்ளும் இளவரசன் உதயகுமரன் தன் கழிகாம இழி பண்பு காரணமாகவே கொலையுறுகிறான். கொன்றது மணிமேகலை அல்ல. எனினும் அவனது இறப்புக்குக் காரணம் அவளே எனப் பழி சுமத்தப்பட்டு அவள் சிறையில் அடைக்கப் (மணிமேகலை : 22 சிறை செய் காதை 2831) படுகிறாள். இது மன்னனே பெண்களுக்கு எதிராக நின்ற இழி நிலையை வெளிப்படுத்துகிறது.

2.2 2 உதயகுமரனின் தாய் அரசமாதேவியும் மணிமேகலைக்குத் தீங்கு இழைக்கின்றாள். தன் மகன் இறப்புக்கு அவளே காரணம் எனத் தவறாய் கணிக்கும் அறியாமை பொதிந்த அவள், மணிமேகலை சிறையிலிருந்த போது அவளுக்கு நஞ்சு கலந்த உணவு தந்து அவளைக் கொள்ள முனைவதோடு அவளுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து, அவள் மீது காமுகன் ஒருவனை ஏவி விடவும் செய்கிறாள். பெண்ணை அழிக்கும் ஈனம் அரசமாதேவியிடம் விசுவரூபம் எடுத்துள்ளமையை அல்லவ இச்செய்தி நமக்கு உணர்த்துகிறது!

2 3.0 அன்றைய பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

2 3.1. பரத்தை குலத்தில் தோன்றியவள் ஆயினும் தன்னை அணுகும் இளவரசனிடம் தன் விருப்பம் இன்மையை வெளிப்படுத்துகிறாள் மணிமேகலை. பின்னரும் அக்காமுகன் அவளை ஆக்ரமிக்க வெறி கொள்வது இழுக்கல்லவா?

2.3.2. மணிமேகலையைத் தேடிச் சோலை நோக்கி விரையும் தேரில் உள்ள உதயகுமரனுக்கு, பரத்தை ஒருத்தியுடன் அவளது

மேல் நிலை மாடத்தில், காற்று நுழை வாயிலில் அமர்ந்துள்ள வணிகன் எட்டி குமரன், 'மணிமேகலை ஆடவரின் இன்ப நுகர்விற்கே வைக்கப்பட்டவள். அவள் துறவு பூணுவது இரங்கற்குரியது. இளவரசனாகிய நீ அவளைப் பெறற்குரியவன் என்று கூறி மணிமேகலையை அவன் விரைந்து பின்பற்றிக் கவரத் துணையாகிறான்.

2.3 3. இந்திர விழா காணத் தனித்துச் சென்ற சுதமதியை வானவன் ஒருவன் கவர்ந்து சென்று துய்த்து, பின் பழமுண்டு தோலை எறிவது போல அவளை விடுவித்து நகர்கிறான்.

2 3.4. பெண்கள் தனியே நடப்பின் எவ்வெவ்விடத்தில் எவ்வெவ்வரால், எவ்வெத்துன்பங்கள் வரும் எனச் சுதமதி மணிமேகலையிடம் உரைத்து, துன்பம் வர வேற்கும் வழிகளைத் தவிர்த்து வேறொரு வழியில் மலர்வனத்திற்கு அவளை அழைத்துச் செல்கிறாள் (மணிமேகலை)

2.4. அன்றைய சமுதாய அமைப்பு, பரத்தை குலத்தில் பிறந்த ஒரு பெண் அறிவார்த்தமான நியாய உணர்வோடு யோக்யன் ஒருவனை வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள விரும்பினாலும் அதனை அனுமதிக்காது. அத்தகைய சூழலில் "பட்டிமாடுகள் பல_ சேர்ந்து குடிக்கும் பிண்ணாக்குத் தொட்டி" போல உணர்ச்சிகள் அமுக்கப்பட்டுப் பரத்தையால் வாழ்வதை விடத் துறவு வாழ்வை மேற்கொள்வது நன்று எனும் விரக்தி நிரம்பிய முடிவை, மாதவி மணிமேகலைக்குத் தரும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். மணிமேகலையின் கூந்தலை மழிக்கும் காலம், அவளுள் இயல்பாக உலகாயத வாழ்வில் காதல் துளிர்க்கத் தொடங்கும் இரண்டாம்பத்தின் முற்பகுதி என்பதனை நாம் நினைவில் நிறுத்துவோமே ஆனால், பெண்ணுக்கு இழைக்கப்பட்ட சமுதாயக் கொடுமை அது எனத்தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்

2.5. பௌத்த மதம் 'ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இயற்கை வாழ்வைக் காட்டிலும் துறவு வாழ்வு உன்னதமானது' எனும் கொள்கை உடையது. 'பெண்ணே காம இழிவுகளுக்கு வேர்' எனும் ஒரு தலைப்பட்சக் கருத்துடையது. எனவே காம ஊற்றுக்களாக, சமுதாய அமைப்பால் தோற்றுவிக்கப்பட்டிருந்த பரத்தையரில் ஒருத்தியை, அத்துறையினின்று அகற்றித் துறவி ஆக்கிக் காட்ட,

அதற்குரியவளாக மணிமேகலையைத் தேர்ந்தெடுத்தது எனினும் பெண்ணுக்கு முக்தி இல்லை. அவள் முக்தியை விரும்பினால் ஆணாகப் பிறந்துதான் பெற முடியும்' எனும் தனது கொள்கையைப் பௌத்த மதம் தானே எப்படி ஒதுக்க முடியும்? அதுவும் மணிமேகலையைப் டல்வேறு மதக்கருத்துக்களையும் அறிய வைத்து, அவை அனைத்தைக் காட்டிலும் 'பௌத்தமே செம்மாந்தது' என அவளால் உலகில் நிறுவ நினைக்கும் அம்மத ஆசைக்கு அவளது பெண்பிறவி தடையாக அமையும் போது என்ன செய்வது? அவளுக்கு ஆண்வேடம் அணிவித்துப் பல இடங்களுக்கும் சென்று பலரிடம் கற்று வாத விவாதத்துடன் மீள வைக்கும் புதுமை புகுத்தப்படுகிறது, எனினும் பெண்கள் அனைவர்க்கும் இது எப்போதும் நடப்பியலில் முடியுமா? ஆக, பெண்கள் முன்னேற்றம் பொறுத்தவரை, மதங்கள் அன்றைக்கே தடையாய் அமைந்து இருந்த பாரபட்சத்தை, இது சோற்றில் மறைத்த முழுப் பூசணியாய்க் காட்டி நிற்கிறது.

30 இலக்கியத் தோற்றங்களின் அடிப்படை நோக்கமே தன் முந்தைய காலக் குறைகளை அகற்றி அவ்வப்பொழுது புரட்சி விளைப்பது தான். அதன்படி இரட்டைக் காப்பியங்கள் அவற்றிற்கு முந்தைய காலங்கட்குப் புரட்சி இலக்கியங்களாக அமைந்துள்ளன என்பதில் இரு கருத்தில்லை. ஆனால் பொண்ணுரிமைக் காப்பியம். பெண் விடுதலைக் காப்பியம் என அவற்றைப் பேசுவது பொருந்தாது.

பின் குறிப்பு:

காப்பியங்கள், இயற்கையில் நடக்க முடியாத நம்ப முடியாத நிகழ்ச்சிகள் பலவற்றைத் தம்முன் கொண்டவை உண்மைகளை எடுத்துரைக்கும் போது அவற்றை எடுத்துக்காட்டுகளாக உரைப்பது அறிவுக்குப் பொருந்தாது ஆதலின் அத்தகையன பற்றி இக்கட்டுரை பேசவில்லை.

(1) நூல் மதிப்புரை

நூல் — அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி

ஆசிரியர்: டாக்டர் கி. இராசா, முதற்பதிப்பு: வெளியீடு — பார்த்திபன் பதிப்பகம், (1987) மதுரை - 1.
விலை ரூ. 10.00 ; பக்கங்கள்: 86.

இந்த நூல் ஐந்து இயல்களால் ஆனது. இலக்கியமும் அறிவியலும் என்ற முதற்பகுதியில் இலக்கிய வளர்ச்சியை உயிரினம், பயிரினம் வளர்ச்சிகளுடன் ஒப்பிடுகிறார். இலக்கிய வகை (genre) உருவாகும் கால, சமூகப் பின்னணிகளின் அடிப்படைகள் வேறு; அறிவியல் ஆய்வில் இயற்கையில் நிகழும் உயிரினவளர்ச்சி(Evolution) என்பது வேறு. இரண்டையும் மேலோட்டமாக - மேற்கோள்கள் தந்தே - முதல் இயல் ஒப்பிடுகிறது. 'சூழலில் இலக்கியவளர்ச்சியும்' என்ற இரண்டாம் இயலில் சூழல் (environment) என்பது எவ்வாறு இலக்கிய வளர்ச்சிக்கும் உயிரின வளர்ச்சிக்கும் அடிப்படையானது என்பது விளக்கப்படுகிறது அறப்பண்பு மிக்க காலத்தில் அறநெறிப் பாடல்கள் தலைமை தாங்கின (ப 19) என்று கூறிக் காலச் சூழலுக்கு ஏற்பப் புதிய இலக்கிய வகைகள் தோற்றம் கொண்டன என்று கூறுகிறார். இப்பகுதியில் மறம், அறப்பண்பு, தத்துவம், விடுதலை வேட்கை என்று இலக்கிய வகையின் பாடு பொருளை - அடிக்கருத்தை -சூழலுடன் விளக்கி விட்டு, உடன் அடுத்த பக்கத்தில் (அதே பத்தி - அதே உட்தலைப்பு) புதுக்கவிதை தோன்றியதை - மக்களிடையே செல்வாக்கு பெற்றதை - சூழலுடன் ஒப்பிடும்போது அடிக்கருத்தை விடுத்து இலக்கியவகை என்பதற்கும் மக்களின் சுவை என்பதற்கும் செல்லுவது பொருத்தமாக இல்லை.

அடுத்த இரு இயல்களில் 'இலக்கிய வகைகளின் உருவாக்கும்' வகை வளர்ச்சிக் கொள்கைகள்' பற்றி விளக்குகிறார். இறுதி இயலில் இலக்கிய வகைகளின் பல்வேறு நிலைகளைத் தொகுத்தும் பகுத்தும் விளக்குகிறார். தொல்காப்பிய சங்க இலக்கிய, திருக்குறள் காலத்தில் பெண் தம் காதலரை எண்ணி மடல் ஏறுவதாகப் பாடும் இலக்கிய மரபு கிடையாது. திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் மடல் ஏறுதல் கூடாது என்பதற்கு மாறாகப் பாடுகிறார் :

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனையாம்
தெளியோம்
மன்னு வடநெறியே வேண்டினோம்''

என்பது அப்பாடல். இங்கு ஆழ்வார் இறைவனை நாயகனுகவும் தம்மை நாயகியாகவும் கொண்டு பாடும்போது எப்பாடுபட்டாகினும் அவனை அடைவது, அடையமுடியாவிடில் தன்னை அழித்துக்கொள்வது என்ற மனத்துடிப்பை - பக்தி நிலையை - பாடுகிறார். அதற்கு மடல் என்ற பழைய இலக்கியவகையைத் தேர்கிறார். மன்னு வடநெறியே என்பதில் அவர் காட்டும் சான்றுகள் : (அதே பெரிய திருமடலில் அடிகள் : 26-30) ராமன் பின்போன சீதை, வேகவதி, அர்ச்சுனன் உலூபி, அறிருத்தன் உஷை ஆகியோர். இதில் வேகவதி தவிர பிற அனைவரும் மணமானவர்கள். இங்கு ஆழ்வார் கருத்தின்படி மடல் என்ற இலக்கியவகைக்கு அடிக்கருத்து எப்பாடுபட்டாகிலும் - தன்னை அழித்துக் கொண்டு ஆயினும் தலைவனை அடைவது என்ற பனஉறுதிப்பாடு என்பதே இதனைப் புரிந்துகொள்ளாமல், 'பெண்டிர் மடல் ஏறல் வடமொழி இலக்கிய மரபில் ஏற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. இம்மரபைத் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகஞ் செய்த திருமங்கையாழ்வார் வடமொழி மரபைத் தமிழ் மரபிற்கேற்பப் பாடுவதைக் காணலாம்'' (ப. 70) என்று கூறுவது திருமங்கையாழ்வார் பாடும் தமிழ்மரபையும் வடமொழி இலக்கிய மரபையும் வடமொழி இலக்கிய மரபையும் பிறழ உணர்ந்த நிலை என்று தோன்றுகிறது.

இப்பகுதியில் (ப. 70) உன்னி உலவா-உலகறிய என்னும் பெரிய திருமடல் பாடல் அடிகளும் எல்லாப் பின் துணை நூற் பட்டியல் (பக்கம் 84-85) பகுதியிலும் பிழைகள் உள்ளன. அடுத்த பதிப்பு உருவாகும்போது மேற்குறித்த பிழைகள் இன்றி நன்கு வருமேயானால் தமிழுக்குப் பெருமை சேர்க்கும்.

சு. வேங்கிடராமன்

(2) நூல் — தமிழுக்கு மீண்டும் ஒரு வடிவமாற்றம்

ஆசிரியர் : கன்னக்குறிச்சி, வை. தங்கமணி

வெளியீடு : அன்னையகம், 12, இராமச்சந்திரத்-
தடாகத் தெரு, திருமங்கலம் - 626 706.
விலை : ரூ. 5.00; பக்கங்கள் : 50 ; (1987)

தமிழ் மொழிக்கு வரி வடிவில் மாற்றம் வேண்டும் என்பதை இந்த நூல் வலியுறுத்துகிறது. தொல்காப்பியர் எழுதிய வரிவடிவத்தை இன்று நாம் பின்பற்றவில்லை சிலம்பு பாடிய இளங்கோவும் திருவள்ளுவரும் எழுதிய வரிவடிவங்களில் நாம் இன்று எழுதவில்லை. நாம் இன்று எழுதுவது புதிய வடிவம் ஒரு மொழி காலத்தின் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது தன் வரிவடிவங்களை மாற்றிக் கொள்ளும். ஒலியைக் குறைத்தால் மொழியின் வளங்குன்றும் ஆனால், வரிவடிவை மாற்றி அமைப்பதால் பழுது இல்லை மாற்றியமைப்பது தேவை என்னும் போது மாற்றி அமைத்திட வேண்டும் என்ற கண்ணோட்டம் இந்தநூலின் அடிப்படையாகும்.

முன்னமே வந்துள்ள இப்பொருள் பற்றிய பிற அறிஞர்கள் கருத்துக்களை உள்வாங்கி அவற்றின் மேல் ஆய்வாக இந்தநூல் எழும் அடிப்படையை விளக்கியுள்ள திறம் பாராட்டிற்குரியதாகும் நூலின் முதற்பகுதியில் மொழியும் சிறப்பையும் மொழிக்காப்பையும் விளக்கி நிறுவுகிறார். ஓரொலிக்குப் பல வரிவடிவம் இருப்பது எம்மொழிக்கும் பொதுவியல்பு என்று விளக்குகிறார். 1934ஆம் ஆண்டு முதல் எழுத்துச் சீர்திருத்தம் நிகழ்ந்த வரலாற்றை எடுத்து விளக்குகிறார் பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் என்பதிலிருந்து தாம் படைக்கும் முறை மாறுவதை விளக்குவதுடன் இறுதியில் அட்டவணை இட்டும் காட்டும் நெறி பாராட்டிற்குரியது. முப்பது வரிவடிவ எழுத்துக்களையும் ஏழு குறியீடுகளையும் சேர்த்து 37 எழுத்துக்களால் தமிழில் உள்ள அனைத்து எழுத்துக்களையும் எழுதிக்காட்டுகிறார். வடிவச்சீர்மை காரணமாகத் தட்டச்சு, அச்சு, கணிப்பொறி பயன்பாட்டிற்கு மிகவும் இவை - இந்த வரிவடிவ மாற்றம் துணைசேர்க்கும். வீரமாமுனிவரும் பெரியாரும் செய்த மாற்றங்களின் அடிப்படையில் எழுந்த அகழாய்வு என்ற நிலையில் அறிவியல்பூர்வமாகவும் காலத்தின் தேவைக்கு ஏற்பவும் இந்தநூலைப் படைத்த அறிஞரைப் பாராட்டுவது நம் கடமையாகும். நூலைப் படித்து இப்பொருளைக் குறித்துச் சிந்தித்து நடைமுறைப்படுத்த நாம் முனைவோமாயின் அதுவே நூலாசிரியருக்குக் கிட்டும் பெரும் ஏற்றமாகும்.

க. வேங்கடராமன்

மலேசிய மேடை நாடகங்கள்

—அ. மணிசேகரன்
கோலாலம்பூர்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சிறுகதை, கவிதை, நாவல் போன்ற படைப்பிலக்கியங்களைக் கண் கொண்டு எழுத்துக் கூட்டிப் படித்துவிட்டு விமர்சிக்கலாம். அவை நிலையாக எழுத்து வடிவத்தில் இருப்பதால் அவற்றை ஒன்றுக்குப் பலமுறை படித்துப் படித்து விமர்சிக்கலாம். ஆனால் நாடகமோ அப்படியல்ல. நாடகம் நடைபெறுகின்ற காலம் வரை கண்களையும் காதுகளையும் கொண்டு ரசித்ததோடு அந்த நினைவு மட்டுமே மனத்தில் நிற்கிறது. அந்த நினைவைக் கொண்டுதான் விமர்சிக்க வேண்டியிருக்கிறது. இங்கே தான் ஆபத்தே உருவாகிறது. விமர்சனம் எழுதுவோர் நாடகத்தை எந்த பார்வையைக் கொண்டு பார்க்கிறார்? நாடகத்தில் நடித்தவர்கள் தமக்கு வேண்டியவரா வேண்டாதவரா என்பதும் முக்கியமாகிறது. நாடகத்தில் ஒன்றைச் சொல்ல அதனை ரசிகரான இவர் எவ்வாறு புரிந்து கொள்கிறார்- இத்தகைய அம்சங்கள் முக்கியமாகும். நாடகத்தை அவர் எந்த கோணத்தில் பார்க்கிறார் என்பதுவும் முக்கியம். ஒரே பொருளை இரு வெவ்வேறு மனிதர்கள் ஒரே மாதிரியாக பார்ப்பது கிடையாது. பொருள் ஒன்று - பார்வை மட்டும் வெவ்வேறு. நாடகமும் அப்படித்-தான். நாடகத்தில் என்ன ஒரே அம்சம் மட்டும்தானா இருக்கிறது விமர்சனம் கூற? நடிப்பென்று ஒன்றுண்டு - அந்த நடிப்பிலே உயி-ரோட்டம் ஒன்றுண்டு, அந்த உயிரோட்டத்திற்கு சரியான வசனம் என்றொன்று உண்டு, அந்த வசனத்தை உணர்ச்சியோடு உச்சரிப்-பதென்று ஒன்று உண்டு, - அந்த உச்சரிப்பில் ஏற்றத் தாழ்வு தொனி இருக்கிறதா, அந்த தொனிக்கும் குரல் வளத்திற்கும் பொருத்தம் இருக்கிறதா - என்றெல்லாம் ஒன்றுக்குள் மற்றொன்றை ஊடுருவிப் பார்க்க வேண்டும். இந்த விதமான ஆழமான பார்வை நாடகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் செலுத்தப்பட வேண்டும். அதாவது நடிப்பு-இசை, வசனம், கதை, டைரக்ஷன், ஒப்பனை, ஓவியம், காட்சி, திரைச்சீலை, உடையலங்காரம் - இப்படி அப்படி செலுத்திப் பார்த்-தால் தான் நாடகத்தின் வெற்றி தென்படும். ஆனால் அந்த அளவுக்கு மலேசிய நாட்டில் நாடகங்களுக்கான விமர்சனங்கள் அமையவில்லை என்பது தான் உண்மை.

இங்கே பார்க்கும் பார்வையைப் பொறுத்தே நாடகத்தின் விமர்சனம் அமைகிறது. நல்லக் கூட்டத்தைப் பார்த்து நல்ல நாடகம் என்று கூறக் கூடும். நல்ல கூட்டத்திற்கு விளம்பர பலம் காரணமாகலாம். சமூக நாடகத்தில் பிரமாண்டமான காட்சியமைப்பு இல்லாததால் நாடகம் நன்றாக இல்லை என்பர். பிரமாண்டமான காட்சியமைப்பு வரலாற்று இலக்கிய நாடகங்களுக்கே அவசியம், சமூக நாடகத்திற்கு அல்லவே! பல வண்ணங்களில் கண்ணைக் கவரும் காட்சிகளையும் அழகிய உடையலங்காரத்தையும் கொண்டு அருமையான நாடகம் எனலாம். அவை கண்ணுக்கு விருந்தாகும். காதுக்கு விருந்தான இசையமைப்பும் வசனமும் எப்படியிருந்தன? ஆகவே, ஒட்டு மொத்தமான பார்வையே நாடகத்திற்கு முக்கியமாகும். மலேசியாவில் நாடகங்கள் எத்தனை நாட்களுக்கு ஒடுகின்றன என்பதை மட்டும் அளவு கோலாகக் கொள்ளவே கூடாது. நல்ல நாடகம் என்பதும் கெட்ட நாடகம் என்பதும் நாடக மாந்தர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவர்கள் நாடகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் கையாளும் திறனையும் பொறுந்தே அமைந்திட முடியும். எடுத்துக் கொண்ட கரு. கருவை விளக்கும் கதை, கதையை எடுத்துச் செல்லும் கதைத் திட்டம், அதற்கு ஏற்ற வசனங்கள், தேர்ச்சி பெற்ற பொருத்தமான கதாபாத்திரங்கள். நாடகத்தின் தன்மைக்கு ஏற்ற இசையமைப்பு, நாடகத்தோடு ஒட்டிய பாடல்கள், அதனைப் பாடக் கூடிய வளமான குரல்; நாடகத்தின் சாயலுக்கு ஏற்றதான காட்சியமைப்பு. காட்சியமைப்புக்கான அலங்காரம், காட்சி மாற்றம், ஒலி, ஒளி, - இப்படியெல்லாம் ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல, பல்வேறு கூறுகள் உள்ளனவே!

நாடகப் பின்னணியும் கருவும்.

நமது நாட்டில் பலதரப்பட்ட நாடகங்கள் நடந்தேறியுள்ளன. புராண இதிகாச நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், சமூக நாடகங்கள், இப்படியாக நாம் அவற்றைப் பிரிக்கலாம். கவிதை நாடகம் ஒன்றும் (பாஞ்சாலியின் சபதம் - குறுநாடகம்) சமய நாடகம் ஒன்றும் (அபிராமி மைந்தன்) நடந்தேறியுள்ளன. ஆனால் இசை நாடகம் இன்னும் சுயமாகப் போடப்படவில்லை

நாடகங்கள் இங்கே தொடங்கப்பட்டபோது அவை பொதுவாகப் புராண இதிகாச நாடகங்களாகவும், இன்னும் மக்கள் வாழ்க்கையில் நிலைத்துவிட்ட கதைகளைக் கொண்ட நாடகங்களாக-

வும் இருந்தன. அதாவது இராமாயணம், மகாபாரதப், வள்ளி திருமணம், சீதா கல்யாணம், கிருஷ்ண லீலா, அல்லி அர்ஜுனன் அல்லி அரசாணி, நந்தனார், அரிச்சந்திரா, குலேபகாவலி இப்படியாக இருந்தன. அதனை அடுத்தாற்போல் சமூக நாடகங்களும் வரலாற்று நாடகங்களும் சரிபாதி கலந்து அரங்கேறின. இந்த மாற்றம் 1940-ஆம் ஆண்டுகளிலேயே துளிர்விடத் தொடங்கினாலும் கூட, 1950ம் ஆண்டுகளில் தெளிவாகத் தெரிந்தன. அதனையும் அடுத்த நிலையில் அறுபதுகளில் அங்கே கிட்டத்தட்ட அனைத்துமே சமூக நாடகங்-களாக அமைந்து புராண நாடகங்களும் வரலாற்று நாடகங்களும் பொதுவாக அபூர்வமாகி விட்டன. இந்த மாற்றங்கள் யாவும் நடந்து-வந்ததற்கும் காரணம் இருந்தன. மக்களின் ரசனை மாறத் தொடங்கியதை நாம் முதல் காரணமாகக் கூறலாம். நாடகம் தயாரித்தவர்கள், தாங்கள் கொண்டிருந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்ய நினைத்ததே இரண்டாவது காரணம், இவற்றில் இரண்டாவது காரணத்தை மேலும் பார்க்கவேண்டும். 1948ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கத்தின் தகவல் இலாகா பல நாடகங்களைப் போட்டது. அவை யாவுமே தேச உணர்வை வளர்ப்பதாகவும் கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் பற்றி மக்களுக்கு எச்சரிப்பதாவும் அமைந்தன. இவை பிரச்சார நாடகங்கள். 1950ப் ஆண்டுகளில் திராவிடர் கழகத்தின் கொள்கைகள் எழுந்து-கலைத் துறைகளில் நன்கு ஊடுருவி இருந்த நேரம் அப்போது போடப்பட்ட நாடகங்கள் பொதுவாக சாதிஒழிப்பு, மது அருந்தாமை, பெண் விடுதலை, கடவுள் பெயரில் அநியாயம், பொருளாதார ஏற்ற இயக்கம், கலப்புத் திருமணம், சமரச உணர்வு, சீர்திருத்தம். விதவை மணம் தொழிலாளர் முன்னேற்றம் போன்ற கருக்களையே கொண்டிருந்தன. இவற்றோடு மர்மம், காதல், நகைச்சுவை நாடகங்களும் அரங்கேறியுள்ளன.

பின் தள்ளப்பட்டோர் பாராட்டுக்குரியவர்கள்

நாடகம் பார்க்கும் நாம் அதிலே நடித்தவர்களையும், காட்சி-களையும், மேடை அலங்காரத்தையும். ஒலியையும், ஒளியையும், ஒப்பனையையும் கண்டு பாராட்டுகிறோம். ஆனால் திரைக்குப் பின்னால் - மேடையின் பின்னால் இருந்துக்கொண்டு இயங்கு-பவர்களை நாம் மறந்து விடுகிறோம். அவர்கள் இல்லாமல் நாடகம் இல்லை என்பதே உண்மை. நேரத்தின்படி ஒவ்வொரு காரியத்தையும் சுறுசுறுப்பாக அவர்கள் செய்யவில்லையென்றால் மேடையில் நாடகம் நடைபெறாது மேடையில் வந்துபோவோர் நடிகர்களும் நடனக்காரர்-

களும், பின்னால் இருப்பது நாடக ஆசிரியர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடன ஆசிரியர்கள், ஒப்பனை செய்வோர், மேடை-நிர்வாகி, ஒளி வழங்குவோர், ஒலி வழங்குவோர், இசை வழங்குவோர் இப்படியாகப் பலர்.

மேடைக்குப் பின்னால் பல சம்பவங்கள் நிகழும். அது நமக்குத் தெரியாது. பல கலைஞர்கள் பாராட்டுக்களைப் பெறுவதும் உற்சாகத்தைப் பெறுவதும் உதைகளைப் பெறுவதும், வாங்கிக்-கட்டிக்கொள்வதும், மேடைக்குப் பின்னால்தான். நாடகம் முடியும் வரையில் வெளியில் சென்ற வயது பெண் வீடு திரும்பாததைக் கண்டு வழிமேல் விழிவைத்து தவித்திருக்கும் தாயின் பரிதவிப்பு போல்தான் மேடைக்குப் பின்னால் உள்ளோரின் நிலைமை இருக்கும் நாடகம் முடிந்தவுடன் திருமணத்தில் தாலிகட்டிய பின்னர் சம்பந்திகள் அர-வணைத்துக் கொள்வது போல்தான் அந்த இரு தரப்பினரும் இருப்-பார்கள். நாடகம் என்பது கண்ணுக்குத் தெரிவது மட்டுமல்ல. கண்ணிலிருந்து மறைக்கப்பட்டதுப்கூட. அதிலே மூன் தள்ளப்பட்ட-வர்களும் மேடையின் பின் தள்ளப்பட்டவர்களும் சம பங்கு வகிப்-பார்கள். அவர்களையும் என்றுமே சேர்த்துப் பாராட்டுவோம்.

நினைவில் நிறுத்துவோம்

வானத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன. ஆனாலும் அவற்றுள் ஒரு சில நட்சத்திரங்கள் கூடுதலாகவே ஜொலிக்கின்றன. அதுபோல் மலேசிய மேடை நாடகக் கலையில் பலர் பிரவேசித்திருக்கலாம். அவர்களில் ஒரு சிலர் ஒரு சில தனிச்-சிறப்புக்களினால் சற்று கூடுதலாகவே பெயர் எடுக்கின்றனர் நாடகக் கலைக்கெனத் தொண்டு செய்தோரில் டி. என் வைத்தியநாதன், ஆர்.பி.எஸ் மணியம், காளி சுப்பையா, ஆழி அருள்தாஸ், நாயகம் என சிலரை அடுக்கலாம் இசையமைப்புக்கு நல்ல சேவைகளை வழங்கியவர் இசைச்செல்வர் சுந்தரராஜ், நாகசாமி பாகவதர் எனலாம். ஒப்பனை என்றோலே பாபுராவ் சிகரத்தில் நிற்கிறார் வசனகர்த்தா, டைரக்டர், நடிகர், நடிகை எனப் பலர் இருக்கிறார்கள்.

நாடகத்துக்கும் அப்பாற்பட்டோரின் நாட்டம்.

மலேசியாவில் மேடை நாடகங்களைப் போட்ட பெருமை-யெல்லாம் முற்றிலும் நாடகக் கலைஞர்களுக்கு மட்டுமே உரியது

என்றுவிடமுடியாது. நாடகத்திற்கு அப்பாற்பட்ட அன்பர்களும்கூட இந்த நாடகத்துறையில் புகுந்துள்ளனர். அவர்கள் அனைவருமே வெவ்வேறு காரணங்களுக்காக மலேசியாவில் நாடகங்களைப் போட்டுள்ளனர் பெரும்பாலானோர் நாடகத் துறை மீதுள்ள ஆவலினால் நாடகத்துறைக்குச் சேவை செய்துள்ளனர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

சங்கீத அபிவிருத்தி சபா 1927 ஆம் ஆண்டிலேயே நாடகத் துறையில் நுழைந்துவிட்டது.

இந்திய சுதந்திர சங்கம் இரண்டாவது உலகப் போரின்போது (1943) சுதந்திர தாகத்தைத் தூண்டிவிடுவதற்காக நாடகங்களைப் போட்டுள்ளது அதே போல் சுத்த சமாஜத்தினர் (Pure life society) நிதி திரட்டுவதற்காகவும் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகவும் நாடகங்-களைப் போட்டுள்ளனர் (தந்தையின் குரல்) மலேசியத் திராவிடர் கழகம் ஒரு நாடகக் குழுவன்று ஆனாலும் அது கொள்கைப் பிரச்சாரத்திற்காக நாடகங்களைப் போட்டுள்ளது. கிள்ளான் இந்திய வாத்தியக் குழுவும் நாடகத்தை நடத்தியுள்ளது (அந்தமான் கைதி). வ.உ.சி. விளையாட்டுக் குழுவும் இத்துறைக்குள் புகுந்துள்ளது. (சூழ்ச்சி) கலைப் பண்ணையும் அவ்வாறே செய்துள்ளது. மலேசிய அரசாங்கத்தின் தகவல் இலாகா அவசர காலத்தின் போது கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளை எதிர்த்து பிரச்சாரம் செய்வதற்காக நாடகங்களைப் போட்டுள்ளது. செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம் தங்கள் கட்டிட நிதிக்காக நாடகங்களைப் போட்டுள்ளது. பள்ளி கட்டிட நிதிக்காக தமிழாசிரியர் கலைக் குழு நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளது (ஜீவஜோதி) தமிழ் நேசன் நாளேட்டின் ஊழியர்களும் இந்த நாடக முயற்சியினை மேற்கொண்டனர். (இலட்சியவாதி). பத்துமலை இளைஞர்களும் ஒரு நாடகத்தைப் போட்டுள்ளனர். அகில மலாயா தமிழர் சங்கம், இந்திய கிருஸ்துவ தொழிலாளர் சங்கம், பேராக் மாநில தமிழ் எழுத்தாளர் சங்கம், தைப்பிங் தமிழ் இளைஞர் மணி மன்றம், மலாயா பல்கலைக்கழக தமிழ்ப் பேரவை, இவையும் நாடகங்களைப் போட்டுள்ளன. இது-போல பல தனிப்பட்ட ஆர்வலர்கள், இவர்கள் போட்ட நாடகங்கள் எவ்வகையிலும் நாடக மன்றங்களுடைய நாடகங்களைவிட தரத்தில் குறைந்துவிடவில்லை.

மேற்கண்ட அமைப்புகள் உண்மையில் நாடக மன்றங்கள் அல்ல! ஆனால் அவையும் நாடகத் துறையில் ஈடுபாடு காட்டியது

ஒன்றை மட்டும் காட்டுகிறது பொதுவாக இந்த நாட்டில் எல்லா, அன்பர்களும் தமிழர் அமைப்புகளும் நாடகங்களை ஆதரிக்கின்றன என்பது கண்கூடு.

நாடக ஆசிரியர்கள்

கிட்டத்தட்ட 2வது உலகப் போர் வரையில் நாடக ஆசிரியர்கள் என்றால் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து இங்கே வந்து குடியேறியவர்களாகவே இருந்து விட்டனர் எனலாம். அந்த காலம் வரையில் உள்நாட்டுக் கலைஞர்கள் யாராவது நாடகத்தைப் போட நினைத்தால் தங்களைக் கடுகுகளாகக் கருதிய இவர்கள் மலைபோல இருந்த அந்த தமிழ் நாட்டு நாடக ஆசிரியர்களையே நாடியிருந்தனர். அவர்கள் எழுதி வைத்திருந்த நாடகங்களையே நம் நாட்டு கலைஞர்கள் போட்டனர் அது நாள் வரையிலும் நாடகம் எழுதுவது எப்படி என்பதற்கான பயிற்சி உள் நாட்டில் உள்ள நாடக ஆர்வலர்களுக்கு முறையாகக் கிடைக்கவில்லை. ஆனால் 1950ம் ஆண்டுகளில் நல்ல திரைப்படங்கள் வெளிவந்த கையோடு அந்த திரைப்படங்களின் கதை - வசனத்தைத் தாங்கி வந்த நூல்கள் நிறைய வெளிவந்தன அவற்றைக் கொண்டு உள்நாட்டுக் கலைஞர்கள் நாடகங்களைப் போட்டனர் அந்த நூல்கள் நல்ல வழிகாட்டியாக நமது கலைஞர்களுக்கு அமைந்துவிட்டன. அப்போது தமிழ் நாட்டில் இருந்து சில நாடக நூல்கள் இங்கே வந்து சேர்ந்தன. அறிஞர் அண்ணா ஆசைத்தம்பி, கலைஞர் கருணாநிதி போன்ற தி மு. கழகத்தாரின் நாடக நூல்களும் கிடைத்தன இத்தகைய நூல்களை தங்கள் சொந்த கைகளில் தவழவிட்டதும் உள்நாட்டு கலைஞர்கள் தாங்களாகவே ஆசிரியர்களாக உருவாகினர்.

உள் நாட்டு நாடக நூல்கள்

மலேசியாவில் எத்தனையோ நாடகங்கள் நடந்துள்ளன. அவை நாடகம் முடிந்ததோடு உறங்கிவிடுகின்றன. வானொலிக்கும் சில வேளைகளில் தரமான நாடகங்கள் எழுதப்படுவதுண்டு. அவை நிலையத்துக்கே சொந்தமாகிவிடுகின்றன. நாளேடுகளிலும், வார, மாத ஏடுகளிலும் நாடகங்கள் வந்துள்ளன-அபூர்வம் என்ற அடிப்படையில். இதனால் தான் நாடக ஆசிரியர்கள் ஒரு சிலரே உருவாகின்றனர். நமக்குத் தெரிந்த வரையில் மலேசியாவில் ஒரு சில மேடை நாடகங்கள் மட்டுமே நூல் வடிவில் வந்துள்ளன. அவை

இன்ப ஜோதி, லட்சியவாதி, மணக்கோலம், கடமை வீரன் ஆகியவை இலட்சியவாதி ஈப்போ பணிமாறனின் எழுத்து, கடமை வீரன் எனும் நாடக நூல் மலாக்கா கு. மா. மாணிக்கத்தின் எழுத்தோவியம் ஆகும் இன்ப ஜோதி (1956), லட்சியவாதி ஆகியவை ஈப்போவில் வெளிவந்தவை. நா. ஆ. செங்குட்டுவனின் மனக்கோலம் 1986ல் பத்து மலையில் வெளியிடப்பட்ட நூலாகும்.

நாடகத்தில் பெண்கள்

நமது பெண்களுக்குப் பொதுவாக நாடகத்தை ரசிப்பதில் உள்ள ஆர்வம் நடிப்பில் இல்லை எனலாம். கலையுலகம் என்றாலே தப்புக் கணக்குப் போட்டுவிடும் பலருடைய எண்ணப் போக்கு அதற்கு ஒரு பெருங்காரணமாக இருந்துவருகிறது. இது மலேசியாவில் மட்டுமல்ல தமிழ்நாட்டின் சென்னையில் பெண்கள் ஈடுபடுவது போல் கும்ப-கோணம், தஞ்சாவூர், திருச்சி பகுதிகளில் நாடகத்தில் அவ்வளவாக அவர்கள் ஈடுபடுவதில்லை நாடகத்தில் ஆண்களே பெண் வேடம் போட்டு நடிப்பது தமிழகத்தில் இருந்து வருகிறது. நமது நாட்டில் அந்த நிலைமை இப்போது மாறி வருகிறது. இங்கே தொடக்க காலங்களில் பெண்கள் நாடகத் துறையில் ஈடுபடுவது அபூர்வமாக இருந்தது. எனவே ஆண்களே 1950ம் ஆண்டுகள் வரையிலும் கூட பெண் வேடம் போட்டு நடித்ததோடு நடனமும் ஆடியுள்ளனர். அவ்வாறு ஆண்கள் பெண் வேடம் ஏற்று நடித்ததிலும் நன்மை இருந்துள்ளது. அவர்களை கதாநாயகன் தொட்டு, இழுத்துப் பிடித்தெல்லாம் நெருக்கமாக நடிக்க இயன்றுள்ளது பெண்கள் நடித்திருந்தால் அந்த நடிகையின் கணவன் அல்லது அண்ணன், தம்பி அல்லது பெற்றோர்களிடம் நல்ல பிள்ளை என்று பெயர் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும் இவ்வாறு பெண் வேடம் போட்ட பல ஆண்களைப் பெண்களேப் பார்த்து பொறாமை கொண்ட செய்திகளும் மலேசிய நாடக வரலாற்றில் உண்டு. அந்த பெண் வேடம் போட்ட ஆண்கள் உண்மையில் ஆண்கள் தான் எனத் தெரிந்திருந்தும் அவர்களோடு நெருங்கி நடித்த கணவன்மார்களோடு மனைவிகள் சண்டைப் போட்டுள்ளனர் என்பதை தோட்ட தொழிலா-ளர் சங்கத்தின் ந. இலட்சுமணன் சுவையாக குறிப்பிடுகிறார்.

பெண்கள் இந்தத் துறையில் புகுவதற்குச் சில முன்னோடிகளாக இருந்துள்ளனர். அவர்களில் சிலருக்கு நாடகத்தில் முதல் சந்திப்புக்கள் நடந்து திருமணம் வரை கொண்டு போயுமுள்ளது. நாடகத் துறைக்-

குள் புகுந்த பெண்மணிகளில் நாம் பாக்கியம், திரேசா, குமாரி சந்திரா, குமாரி பைசோன், வெள்ளையம்மாள், ஏகவல்லி போன்றோரைக் குறிப்பிடலாம்.

நமது ரசிகர்கள்

மலேசிய ரசிகர்களுக்கு நாடக ரசனை இல்லை என்று கூறிவிடுவதற்கில்லை தரமான நாடகத்தைத் தயாரித்து தக்க விளம்பரம் கொடுத்தால் அந்த நாடகத்திற்கு இன்னும் கூட கூட்டம் வருவதுண்டு. ஆர். எஸ். மனோகர் நாடகங்கள் இந்த நாட்டிலே தொடர்ந்தாற் போல் 120 நாட்களுக்கு ஓடின என்றால் ரசிகர்கள் இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? ரசிகர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தரமான நாடகங்களைத் தான். இங்கு ஒன்றை மட்டும் நாம் மிகவும் கூர்மையாக யோசிக்க வேண்டியுள்ளது. மிக அற்புதமான நாடகங்களும் கூட அடிக்கடி அங்குமிங்குமாக அரங்கேற்றப்பட்டால் அதற்கான ஆதரவு 1960ம் ஆண்டுகளிலும் 1970ம் ஆண்டுகளிலும் கூட நல்லபடியாக இருந்துள்ளது ஆனால் 1980ம் ஆண்டுகளில் அதே அளவுக்கு ஆதரவு இருந்ததா? என்பது விடை காண முடியாமலே இருக்கிறது. இப்போதெல்லாம் நாடகங்கள் அடிக்கடி நடைபெறுவதில்லை. அவை எப்போதோ ஒரு முறை மட்டும் நடைபெறுவதினால் அந்த நாடகங்கள் வெற்றிபெறக்கூடும். ஆனால் அந்த தரமான நாடகங்களே கூட அடிக்கடி நடைபெற்றுவந்தால் அவற்றுக்கான ஆதரவு கிடைக்குமா என்பது பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம்

ஒரு வகையில் பார்க்கப்போனால், தமிழ்ப் பள்ளிகளும், தமிழ்க் கல்வியும், தமிழைத் தாய் மொழியாகப் பேசுகின்ற குடும்பங்களும் தமிழ்க்கலை மீது இயல்பான ஆவலைத் தூண்டிவிடுகின்றன இந்த சாயல் இப்போது இருக்கிறதா என ஆராயவேண்டும் ரசிகர்களை நம்பித்தான் நாடகம் அரங்கேறுகிறது ரசனை இருக்கிறதா? இருக்கும் ரசனை மேலும் வளர்க்கப்படுகிறதா என நாமும் கேட்டுப் பார்க்க வேண்டும்.

அந்த ஆதரவு திரும்புமா?

நாட்டிலே நாடகம் நல்ல முறையில் செழித்திருந்த காலத்தில் நாடக மாந்தர்களுக்கு இருந்த வரவேற்பையும் கண்டால் நமக்கே பொறாமை வந்துவிடும்போல இருக்கிறது : குறிப்பாக 1930ம் ஆண்டு-

களில் எல்லாம் தோட்டப்புறங்களில் நாடகங்கள் நடைபெற்றால் தோட்ட மக்களுக்கு சந்தோஷம் கரைபுரண்டோடுவதுண்டு. தோட்டப் புறத்தில் நாடகங்கள் கோவில் திருவிழாக்களை ஒட்டி நடைபெறும். அந்தத்திருவிழாவின்போது நாடகம் நடத்தப்படவில்லையென்றால் மக்கள் அடையும் வேதனைக்கு அளவு கிடையாது. ஆகவே, கூடு-கின்ற கூட்டமும் கோவில் திருவிழாக்களுக்கா அல்லது நாடகங்-களுக்கா என்பது தெரியாது அதுமட்டுமல்ல, ஒரு தோட்டத்தில் நாடகம் நடக்கிறதென்றால் அக்கம் பக்கத்து தோட்டத்திலிருந்து வந்து நாடகம் பார்ப்போர் அங்கேயே உறவினர்களின் வீடுகளில் இரண்டு மூன்று தினங்கள் தங்கி எல்லா நாடகங்களையும் கண்டு விட்டு திரும்புவதும் உண்டு. வேலையையும் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டு திரும்புவோர் பலருக்கு வேலை பறிபோயும் உள்ளது. வந்து தங்கிய இடத்தில் பல நாட்கள் பட்டினி கிடந்தும் நாடகங்-களைப் பார்த்துள்ளனர். நடிகர்களும் நடிகைகளும்கூடப் பட்டினி கிடந்து நடித்துள்ளனர். கர்ப்பவதிகள் வயிறு தெரியக்கூடாது என்-பதற்காக வயிற்றை இறுகக்கட்டிக்கொண்டு நடித்து உள்ளனர்.

அதோடு, ஒரு தோட்டத்திற்கு நாடகக்குழு வந்துவிட்ட-தென்றால் அந்த நாடக மாந்தர்களைக் கௌரவிப்பதற்காக ஏராள-மான ஏற்பாடுகள் நடைபெறும். சிலர் அரிசி, சீனி, பருப்பு கொடுத்து ஆதரிப்பர். இன்னும் சிலர் நான் முந்தி நீ முந்தி என தங்கள் வீடு-களில் பந்தி போட அடம் பிடிப்பர். நாடகம் முடிந்தவுடன் சிறப்-பாக நடித்தவர்களுக்கு வேஷ்டி, துண்டு, மோதிரம் போட்டு ரொக்கம் தருவதோடு நெற்றியில் பட்டமும் கட்டுவதுண்டு. பலர் வடைமாலை செய்து, அதிலே நோட்டுகளை சேர்த்துக்கட்டி கழுத்திலே மாட்டு-வார்கள். நாடகம் முடிந்தவுடன் நிறைய கள் கொடுத்து போதை-யேற்றியும் மகிழ்வதுண்டு. நாம் அதை இப்போது எதிர்பார்க்கலாம். ஆனால் அது போன்ற ஆதரவாவது கிடைக்குமா எனப் பார்த்தாலும் அது குறைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

ஓரங்க நாடகங்கள்

முழு நாடககத்தைப் போடுவதில் உள்ள சிரமங்களை அனைவருமே உணர்ந்தே உள்ளனர். அதே வேளையில் நாடகங்களை முழுமையாக கை நழுவவும் மனமில்லை. இரண்டுக்கும் நடுவே நின்று கொண்டு ஓரங்க நாடகங்களைப் போடும் நிலை நின்ற-பாடில்லை. கலை நிகழ்ச்சிகளிலும், தமிழர் திருநாள், பொங்கல்

தினங்களிலும் ஏராளமான ஓரங்க நாடகளைப் போடும் நிலை பரவியுள்ளது. அந்தப் பற்றை நாம் பாராட்டுவோம். இந்த நூலில் ஓரங்க நாடகங்களை இயன்றவரையில் ஒதுக்கியுள்ளேன். சொல்வ-தென்றால் பட்டியல் நீண்டு விடும்

நாடகத்தின் வாழ்வுகாலம்

தமிழ்நாட்டில் நடைபெறும் தரமான நாடகங்கள் வெற்றி-பெறுவது உறுதி. ஆனால் மலேசியாவில் அப்படியன்று. தமிழ் நாட்டில் 60க்கும் மேற்பட்ட நுண்கலைகளை வளர்க்கும் சபாக்கள் உள்ளன. ஒவ்வொரு சபாவும் நாட்டியம், சங்கீதம், நாடகம் இப்படி-யாக ஏதாவதொரு நிகழ்ச்சியை ஏற்று நடத்துவதுண்டு. ஒரு நாட கம் தயாரிப்பில் இருக்கும் போதே அந்த 60 சபாக்களினாலும் புக் செய்யப்படுகிறது. அந்த நாடகமும் அந்த 60 சபாக்களாலும் நடத்-தப்பட்டு முடிந்தவுடன் தான் பிற அமைப்புக்களுக்குப் போகிறது. (சில வேளைகளில் மறுபிறவிகள் எடுப்பது முண்டு) சென்னையில் ஜார்ஜ்டவுன் என்ற இடத்தில் ஒற்றை வாடை தியேட்டர் என்று ஒரு சினிமா அரங்குண்டு. அதன் ஓரத்தில் உள்ள பஸ் ஸ்டாப்பை ஒற்றை வாடை பஸ் ஸ்டாப் என்று அழைத்து வந்தனர். ஆனால் அந்த ஒற்றை வாடை அரங்கிலே ராமாயணம் என்ற நாடகம் 1000 முறை அரங்கேறி முடிவதற்குள்ளாக அந்த ஒற்றை வாடை பஸ் ஸ்டாப் ராமாயணம் பஸ் ஸ்டாப்பாக பெயர் மாறிவிட்டது. ஆனால் மலேசியாவில் ஒரு நாடகத்தைப் பல சிரமங்களுக்கு இடை யில் தயாரித்து விட்டு அதனை ஒரு சில நாட்களுக்கு மட்டுமே-ஓரிரு இடங்களில் நடத்தி விட்டு பின் அதனை மறந்துவிடுவதுண்டு. ஆகவே, நாடகம் உருவாகும் போதே அதனை நாட்டின் பல ஊர் களில் நடத்த முன் கூட்டியே ஏற்பாடு செய்துவிடுவது நன்று. அதிலும் ஒரு சிக்கல் உண்டு. இங்கே உள்ள கலைஞர்கள் யாவருமே முழு நேர ஊழியர்கள். நாடு முழுவதும் சென்று நாடகங்களைப் போடுவதென்றால் அவர்கள் அவ்வளவு நாட்களுக்கு விடுமுறை எடுக்க இயலாது. இந்த தட்டுப்பாட்டினால் நாடகத்தை பல இடங்-களில் விட்டு விட்டுதான் போட வேண்டி இருக்கிறது. இந்த காரா-ணங்களினால் நாடகம் என்பது இந்த நாட்டிலே குறைந்த ஆயுளையே கொண்டிருக்கும், அல்லது தட்டுத் தடுமாறி நீடிக்கும்.

நாடகத்திற்கு ஏணிப்படி இருக்கிறதா?

தமிழ் நாட்டிலே நாடகத்தில் ஈடுபடும் எவருக்குமே மேலும்

வளர்ச்சி அடையக் கூடிய வாய்ப்பு உண்டு நாடகத்தில் நன்றாக நடித்து பேரும் புகழும் பெருபவர்கள் சினிமாவுக்குப் போய் மேலும் பிரபலமாகி கை நிறைய சம்பாதிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இது அந்தக் காலத்து நாடக நடிகர்கள் முதல் இக்கால நாடக நடிகர்கள் வரை உண்மையாகும். அக்காலத்தில் ஜெமினிகணேசனைத் தவிர பிற நடிகர்கள் யாவருமே நாடகம் மூலமாக சினிமாவுக்கு வந்தவர்களே இன்று கூற வேண்டுமானால் ஒய். ஜி. மகேந்திரன், எஸ். வி. சேகர், விசு போன்றவர்களைக் கூறலாம். இந்த வாய்ப்பு இனி மேலும் கூட தொடர்ந்து கிட்டியே வரும். அதுபோலவே நாடக வசன கர்த்தாக்கள் திரைப்பட வசன கர்த்தாக்களாக மாறலாம். தஞ்சை ராமையா தாஸ் நாடக வசனகர்த்தாவாக இருந்து பாட-லாசிரியராக மாறி பின்னர் மாயாபஜார், மிஸ்ஸியம்மா போன்ற படங்களுக்கு கதை வசனத்தையும் எழுதியவர். அது மட்டுமல்ல, புகழ் பெறுகின்ற நாடகங்கள் அப்படியே சினிமாவாக மாறிவிடுவதுண்டு. இயக்குனர் சிகரம் கே பாலசந்தரின் பாமாவிஜயம், நீர்க்குமிழி, மேஜர் சந்திரகாந்த் என்ற வரிசையில் வரும் அனைத்து திரைப்படங்களுமே நாடகமாக இருந்து உருமாறியவை இத்தகைய வாய்ப்புக்கள் யாவுமே கிடைப்பது தமிழ்நாட்டில் தான். நமது நாடகத்தில் பிரபலமடைந்து சினிமாவில் புகும் வாய்ப்பு இல்லை. தொலைக் காட்சியில் சில வாய்ப்புக்கள் ஏற்படுவதும் ஆடிக்கொரு முறை அமாவாசைக்-கொரு முறைதான்.

மலேசியாவில் தமிழ் மேடை நாடகங்களில் நடித்த பின்னர் சந்தர்ப்ப வசத்தால் தமிழ்த் திரையுலகில் புகுந்தவர்களில் ''இரத்தப் பேய்'' நாடகத்தின் பாத்திரங்களைக் குறிப்பிடலாம். ஆனால் அதுவும் மலேசியர்களின் முயற்சி தான். படம் வெற்றி பெறவில்லை கலைஞர்-களும் சினிமாவில் நீடிக்கவில்லை. பின்னர் சென்ற மனு ராமலிங்கம் 'தேவைகள்' படத்தோடு திரும்பி விட்டார். மலேசிய வாசுதேவன் மட்டுமே தமிழ் நாட்டுத் திரைப்பட உலகில் நிலைத்து நிற்கிறார். எனவே தமிழ் நாட்டு நடிகர்கள் முன்னேறி வருகின்ற அளவிற்கு மலேசிய நாடகக் கலைஞகளால் திரையுலகில் வெற்றிகரமாக அடி எடுத்து வைக்க முடியவில்லை.

(தொடரும்)

அறிவிப்பு

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொதுக்குழு உறுப்பினரும், ஓய்வு பெற்ற தலைமைத் தமிழாசிரியருமான நல்லாசிரியர், புலவர் மணி தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள் 17 - 9 - 88 சனிக்கிழமை காலை 8 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் —

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	5.00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும்உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	5-00
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை கலம்பக நூல்கள்**	12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக் கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12.	**உலா நூல்கள்**	10.00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13.	**பாமாலை நூல்கள்**	12-00

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1 ஸ்ரீமுத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5 சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

★ ★ ★

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 8-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1

ஆலவாய் ○ சிம்மக்கல், மதுரை